பக்கங்கள்:- பத்து
Registered as a News paper in Sri Lanka
விலை ரூபா. 6.00

உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTER NET மூலம்
குறைந்த கட்டணத்தில தொடர்புகொள்ள
இலங்கை முழுவதும் 24 மணிநேரத்தில் துரித தபால்/பொதிகள் சேவை
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
303, K.K.S. ROAD, JAFFNA
T.P : 021-2222670, 2223588
FAX: 2223214
Email-del-smskr@eureka.lk

# வலம்புரி

# The Valampuri

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | ஆனி 21 | சனிக்கிழமை | (05.07.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 198

## கரும்புலிகள் தினம் இன்று எழுச்சியுடன் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

கரும்புலிகள் நினைவு நாள் இன்று உணர்வெழுச்சியுடன் தமிழர் தாயகப் பிரதேசம் எங்கும் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

யாழ். குடாநாட்டில் கோட்ட ரீதியாக எழச்சி நிகழ்வுகள் காலை 9 மணிக்கு தமிழீழ தேசிய கொடியேற்றலுடன் ஆரம்பமாகின்றன.

ஈழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் இதுவரை 241 போராளிகள் கரும்புலிகளாகி சரித்திரம் படைத்திருக்கின்றனர். இவர்களில் 177பேர் ஆண்கள். 64பேர் பெண்கள் ஆவர்.

கரும்புலிகளின் உருவப் படம் தாங்கிய அணிவகுப்புடன் வடமராட்சி கோட்ட எழுச்சி நிகழ்வுகள் முதல் கரும்புலி மில்லரின் நினைவுத் தூபிக்கு அருகில் இடம்பெறவுள்ளது.

கரும்புலிகளின் தியாகத் திருநாளை நினைவு கூரும் வகையில் முக்கிய சந்திகளில் சிகப்பு மஞ்சல் கொடிகள் கட்டப்பட்டு அலங்கார வளைவுகள் நிறுத்தப்பட்டுள்ளதுடன் எழுச்சி பாடல்களும் இசைக்கவிடப்பட்டுள்ளன. (இ)

## சென். சாள்ஸ் அதிபரின் கார் விஷமிகளால் எரிக்கப்பட்டது!

### சம்பவத்தைக் கண்டித்து மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். சென். சாள்ஸ் அதிபர் திருமதி பி.எவ். சின்னத்துரையின் கார் நேற்று முன்தினம் இரவு இனந் தெரியாத விஷமிகளால் தீமூட்டி எரிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு 9.20 மணியளவில் குருநகர் ஓடக்கரை வீதியில் அமைந்துள்ள அதிபரின் வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பல லட்சம் ரூபா பெறுமதியான காருக்கு பெற்றோலை ஊற்றிய விஷமிகள் அதற்குத் தீயிட்டனர். அதனால் கார் தீப்பற்றி முற்றாக எரிந்து நாசமாகியது. கார் எரிக்கப்பட்டதனால் அதிபரின் வீட்டின் பின்பகுதியும் சேதமடைந்தது. சம்பவத்தை அறிந்த யாழ். மாநகர சபையின் தீயணைப்புப் படையினர் ஸ்தலத்திற்கு விரைந்து ஏனைய இடங்களுக்கும் தீ பரவுவதை கட்டுப்படுத்தினர்.

கார் தீப்பற்றி எரிவதைக் கண்ட அதிபரின் கணவர் சின்னத்துரை தீயை அணைக்க முற்பட்ட வேளை தீக்காயங்களுக்கு உள்ளாகி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பாடசாலையின் வளர்ச்சியில் அயராது உழைத்த அதிபரி ர் கார் விஷமி


(10ம் பக்கம் ர்க்க)

## ஆனந்தசங்கரியின் தலைமையில்

# கூட்டணியின் மத்திய குழு

# நாளை கொழும்பில் கூடுகிறது

## தலைமையைப் பறிக்க முயற்சி



(நமது நிருபர்)

**தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப் பதவியை குறிவைத்து மிகவும் பரபரப்பான சூழ்நிலையில் நாளை ஞாயிற்றுக்கிழமை தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய குழுக் கூட்டம் கூட்டணித் தலைவரும், யாழ். மாவட்ட எம். பியுமான வீ. ஆனந்த சங்கரி தலைமையில் நடைபெறவுள்ளது.**

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும், சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினருமான வீ. ஆனந்தசங்கரியை தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப் பதவியில் இருந்து இறக்குவதற்கு கூட்டணி எம். பிக்கள் சிலர் எடுத்துக் கொண்ட தீவிர முயற்சி நாளை வெளிப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப் பதவியில் இருந்து விலகிக் கொள்ளுமாறு கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் அண்மையில் ஆனந்தசங்கரியை நேரில் சந்தித்து வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்களின் வேண்டுகோளை அடுத்து கூட்டணியின் மத்திய குழு உறுப்பினர்களுக்கு ஆனந்தசங்கரி தலைமைப் பதவிகளில் இருந்து ஏன்

(10ம் பக்கம் பார்க்க)

## புளொட் உறுப்பினர் சுட்டுக் கொலை

### மட்டக்களப்பில் சம்பவம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு புதூரில் புளொட் உறுப்பினர் ஒருவர் இனந்தெரியாத நபரினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

நேற்று மாலை 6.10 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் புதூரைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான ஜஸ்ரின் என அழைக்கப்படும் வைரமுத்து மேகநாதன் (வயது 32) என்பவரே உயிரிழந்தவராவார்.

மட்டக்களப்பு நகரிலுள்ள புளொட் அலுவலகத்திலிருந்து சைக்கிளில் தனது வீட்டிற்குச் சென்ற போதே வீதியால் நடந்துவந்த இளைஞர் ஒருவர் அவரைக் கைத்துப்பாக்கியால் சுட்டுவிட்டுச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்த பிரஸ்தாப நபரின் சடலம் மட்டக்களப்புப் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(த-14)

## பஸ் மரத்துடன் மோதியதால் குழந்தை உட்பட 11 பேர் பலி

### மடகல்லவில் பரிதாபம்

(கொழும்பு)

போக்குவரத்துச் சபை பஸ் மரமொன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஒரு வயதுக் குழந்தையொன்று உட்பட 11பேர் அவ்விடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

இத் துயரச் சம்பவம் நேற்று மடகல்ல என்ற இடத்தில் இடம்பெற்றுள்ளது.

குருநாகல நோக்கி சென்று கொண்டிருந்த பஸ்ஸே இவ்வாறு மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

பஸ்ஸில் பயணம் செய்த 84 பேர் படுகாயமடைந்துள்ளனர். இவர்களில் 5 பேரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ-5)

## புலிகளின் செயற்பாடுகளை சுவீடன் தடை செய்யாது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் செயற்பாடுகள் எதுவும் சுவீடனில் தடைசெய்யப்படமாட்டாது என்று அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

சுவீடனின் வெளிவிவகார அமைச்சின் தெற்காசிய விவகாரங்களுக்கான பொறுப்பாளரும் டோக்கியோ மாநாட்டில் சுவீடன் சார்பில் கலந்து கொண்டவருமான ஹான்ஸ்நிக்கல்சனே மேற்கண்ட தகவலை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: இலங்கை அரசினதும் தமிழீழ விடுதலைப்புலிகளினதும் சமாதான முயற்சிகளை நாம் பேணவேண்டி இருப்பதனால் சுவீடனில் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளை தடை செய்ய முடியாது.

புலிகளின் செயற்பாடுகள் குறித்து நாம் அறிந்துவைத்துள்ளோம். எதிர்காலத்தில் அவர்களது செயற்பாடுகளைத் தடுப்பதற்கான திட்டம் எதுவும் எம்மிடம் இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இலங்கை அரசுடன் கடந்த ஏப்ரல் மாதம் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் அடுத்துவரும் மூன்று வருடங்களுக்கு நாட்டின் புனர்வாழ்வுப் பணிகளுக்கு சுவீடன் 35 மில்லியன் டொலர்களை வழங்கவுள்ளதென்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம)

## ஜனாதிபதி சந்திரிகாவை ஒருபோதும் நம்பமுடியாது!

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நம்பகத் தன்மை அற்றவர் இவ்வாறு ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் கே.டி. லால்கந்த தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் நம்பகத்தன்மை தொடர்பாக ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கின்ற இடதுசாரிக் கட்சிகளான இலங்கைக் கொம்யூனிஸ் கட்சி லங்கா சமசமாஜக் கட்சி ஆகியவற்றை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எவ்வாறு நடத்துகிறது என்பதை நான் அறிந்து வைத்துள்ளேன். இந் நிலையில் பொதுஜன ஐக்கிய முன்னணி ஜே.வி.பியை வெளியில் இருத்திவைத்து பேச்சு வார்த்தையை நடத்துவதையே விரும்புகிறது.

இதேவேளை பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஜே.வி.பியும் கூட்டுச் சேர்வதற்கு இது தொடர்பான பேச்சு வார்த்தைகள் நடைபெற்றுவரும் வேளையில் அதனைக் குழப்பும் வகையிலேயே இத்தகைய கருத்து வெளியிடப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (வ)

### அரசாங்கம் தற்சமயம் தயார் செய்துள்ள

# இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை புலிகள் புறந்தள்ளிவிட மாட்டார்கள்

## அரச உயர் வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

பரந்த அடிப்படையிலான இடைக் கால நிர்வாகமொன்றிற்கான கட்ட மைப்பொன்றையும் வழிகாட்டும் கொள்கை கோட்பாட்டுத் தொகுதி யொன்றையும் விடுதலைப் புலி களுக்கு அனுப்பிவைக்கத்தீர்மானித் திருப்பதாக அரசாங்க உயர் வட் டாரங்களிலிருந்து தெரியவந்துள் ளது.

மீண்டுமொரு முறை நிராகரிக் கப்படக்கூடியதாக இல்லாமலிருக் கும் வகையிலும் பேச்சுக்களை மிக விரைவில் தொடங்குவதற்கு வகை செய்யும் விதத்திலுமே அரசாங்கம இவ்வாறு செய்திருப்பதாகவும் தெரி விக்கப்படுகிறது.

விடுதலைப்புலிகள் திட்டவட்ட மான இடைக்கால நிர்வாக வரைபு ஒன்றை கோரியிருந்தனர். ஆயினும், அண்மையில் லண்டனிலுள்ள விடு தலைப்புலிகளின் அரசியல் ஆலோச கர் அன்ரன் பாலசிங்கம் அரசாங்கத் துடன் பேச்சுக்கள் நடத்துவதற்கு உடன் பட்டிருந்தார்.

புதிய நிர்வாகக் கட்டமைப்பின் அதி காரங்கள் போரினால் சின்னா பின்ன மாக்கப்பட்ட பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புதல், புனர்நிர்மாணம, மீள் குடியமர்வு, அத்தியாவசிய சேவைகளை மக்களுக்கு வழங்குதல் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருக்கும்.

இந்தக்கட்டமைப்பின் அடிப்படை யாக சகல சமூகங்களின் நலன்களைப பாதுகாத்தல், வெளிப்படைத்தன்மை, பயன்விளைவுடைய தாயிருத்தல், பொறுப்புக்கூறக் கூடியதாயிருத்தல், புலிகள் குறிப்பிடத்தக்க முக்கிய பங்கினை வகித்தல் ஆகிய கொள் கைகள் இருக்கும்.

புனர்வாழ்வையும் நிர்வாகத் தையும் மையப்படுத்தியுள்ள இந்தக் கட்டமைப்பு சட்டவாக்கமொன்றி னூடாக ஏற்படுத்தப்படாமல் நிர்வாக ரீதியாக ஏற்படுத்தப்படுவதாயிருக் கும் என்றும் அவ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ)

## பிரதமர் நியூயோர்க்பயணம்

(கொழும்பு)

எதிர்வரும் செப்ரெம்பர்மும் நடைபெறவுள்ள ஐக்கியநாடுர் பொதுச்சபை கூட்டத்தில் கலநு கொள்வதற்காக பிரதமர் ரணில்வி கிரமசிங்க நியூயோர்க் செல்லவு ளார்.

இப் பயணத்தின்போது பிர மர் ரணில்விக்கிரமசிங்க ஐரோப்பிய ஆணைக்குழு அதிகாரிகளுடன் இலங கைக்கும் ஐரோப்பிய ஆணைக் குழுவுக்கும் இடையிலான உயர்மட் அரசியல் பேச்சுவார்த்தைகள் குறித்து ஆராயவுள்ளார். (தி)

## ரூபா100 மில்லியன் ஊழல் வழக்குஒத்திவைப்பு

(கண்டி)

மத்தியமாகாண கல்வித் திணைக்கள 100மில்லியன் ரூபா ஊழல் தொடர்பான வழக்கு கண்டி மஜிஸ்ரேட் லியோன் செனவிரட்ண முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பொழுது இரகசியப் பொலிஸாரின் கோரிக் கையின் பேரில் இம்மாதம் 16ம் திகதிக்கு ஒத்திப்போடப்பட்டது.

புலன்விசாரணைகள் இன்னும் முடிவுறாமலிருப்பதால் கால அவ காசம் தேவையென இரகசியப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் றோஷல் மொசிம்புல மனுவொன்றைத் தாக் கல்செய்தார். இன்னும்பல சாட்சி களின் வாக்குமூலங்கள் பதியப்பட வேண்டியிருப்பதாகவும் இலங்கை வங்கியில் மூன்று கணக்கு வபரங் கள் பரிசீலிக்கப்பட வேண்டியிருப் பதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

புலன் விசாரணைகளைத் துரிதப் படுத்தும்படி ஆலோசனைகூறி விசார ணையை நீதிபதி ஒத்திவைத்தார். (பி)

# ஸ்ரீ.சு.க. - ஜே.வி.பி கூட்டு ஏற்பட்டாலும் 6 வருடங்களுக்கு அரசை அசைக்க முடியாது

## காணி அமைச்சர் ராஜித சேனாரட்ண வீராப்பு

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணிக் கும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் இடையே கூட்டமைப்பு ஒப்பந்தம்



கைச்சாத்திடப்பட்டாலும் ஐக்கிய தேசிய முன்னணி அரசை ஆறு வரு டங்களுக்கு முன்னர் கலைத்துவிட முடியாது என காணி அமைச்சர் ராஜிதசேனாரட்ண தெரிவித்துள் ளார்.

தெல்தெனியாவில் நடை பெற்ற காண்காட்சி நிகழ்வொன்றில் கலந்து கொண்டு பேசும்போது அமைச்சர் இதனைத் தெரிவித் துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற் றிய அமைச்சர் நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு ஐக்கியதேசிய முன்னணி அரசு மேற்கொண்டு வரும் முயற்சிகள் குறித்து சர்வதேச சமூகம் நம்பிக்கை கொண்டுள்ளது.

பொது ஜன ஐக்கிய முன்னணி அரசின் ஆட்சியின் இறுதிக் காலத்தில் சர்வதேச நாடுகள் மற் றும் நிதி நிறுவனங்கள் இலங்கைக்கு உதவுவதை முற்றாக நிறுத்தியி ருந்தன.

அத்துடன் அடுத்த ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத திட்டம் முற்றிலும் மக்கள் மயமான தாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

குறிப்பாக அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு ,20 இலட்சம் பேருக்கு புதிய தொழில் வாய்ப்புத் திட்டங்கள் என்பன அதில் உள்ளடக் கப்படவுள்ளன.

தற்போது நாட்டின் பொருளாதார வளர்ச்சி 5.5 சத வீதத்தால் அதிகரித் துள்ளது.

இதனடிப்படையில் பொருளா தாரத்தில் மேலும் வளர்ச்சி ஏற்படும். இதற்கமைய நாட்டில் பல்வேறு புதிய திட்டங்கள் அமுல்படுத்தப்படும் என அவா மேலும் தெரிவித்துள்ளார். (தி)




யாழ்.மாவட்ட மக்கள் நலன் புரிச் சங்கமும் படையணிகளும் இணைந்து நடத்திய பாடசாலை மாணவர்களிற்கான தேசிய பாசறை நிகழ்வுகள் கடந்த வாரம் இரு தினங்கள் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்றன. இரண்டாம் நாள் ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ். மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சி. இளம்பரிதி உரை யாற்றுவதையும் அருகில் சமுகமளித்த விருந்தினர்களையும் படத்தில் காணலாம்.

# சுகாதார சேவையில் இராணுவ சேவையா?

## சீறுகிறார் மகிந்த

(கொழும்பு)

சுகாதாரத்துறை ஊழியர்களின் வேலைநிறுத்தப் போராட்டத்திற்கு ஈடுகொடுக்கும் வகையில், அவசர காலச் சட்டம் காலாவதியாகிய நிலையில் சுகாதார சேவையில் இராணுவத்தினரை அரசாங்கம் ஈடுபடுத்தியமை அரசியல் யாப்பை மீறும் செயல் என எதிர்க்கட்சித் தலைவர் குற்றம்சாட்டியுள்ளார்.

சுகாதார ஊழியர்கள் கடந்த நான்கு நாட்களாக மேற்கொண்டு வந்த வேலைநிறுத்தப் போராட்டத் தினால் சுகாதார சேவைகள் அனைத்தும் பாதிப்படைந்தன.

இதனை அடுத்து அந்தச் சேவையில் இராணுவத்தினரை அரசாங்கம் ஈடுபடுத்தியது.

அவசரகாலச்சட்டம் நடைமுறை யில் இல்லாதபோது, சுகாதார சேவையை அவசரகால சேவை யாக பிரகடனப்படுத்தாத நிலை யில், அரசாங்கம் இவ்வாறு நடந்து கொண்டமை அரசியல் யாப்பை மீறுவதாக உள்ளது என எதிர்க் கட்சித் தலைவர் குற்றம்சாட்டி உள்ளதுடன் தொழிலாளர்களின் உரிமைகளை நசுக்குவதற்கு அர சாங்கம் வெளிப்படையாகவே செயற்பட்டுள்ளது என்றும் தெரி வித்துள்ளார். (ச)



# மீள் குடியமர்வைத் துரிதமாக்க அமைச்சர் ராஜித தீவிர நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கு -கிழக்கு மாகாணங் களில் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவதற்கான பணிகளை துரிதமாக்குவதற்கு காணி அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ண தீவிர நடவடிக்கை களை மேற்கொண்டுள்ளார்.

இந்த வகையில் வடக்கு- கிழக்கு மீள்குடியமர்த்தல் தொடர் பாக காணி அமைச்சருடன் பேச்சு வார்த்தைகளை நடத்துவதற்கு விடு தலைப்புலிகள் இணங்கம் தெரி வித்ததை அடுத்து இம்மாதம் 26ஆம் திகதி இது தொடர்பாக விடு தலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு திருகோணமலைக்கு விஜயம் செய்யவுள்ளதாகவும், இது தொடர்பாக இராணுவத்தினரும் ஒத் துழைப்புக்களை நல்க இணங்கி யிருப்பதாகவும் அமைச்சர் ராஜித தெரிவித்துள்ளார்.

இதன் முதற்கட்டமாக திரு கோணமலை மாவட்டத்தின் சகல காணிகள் தொடர்பான அறிக்கையி னை வழங்குமாறு திருகோணமலை அரசஅதிபரையும் தமிழீழவிடுதலைப் புலிகளையும் அவர்கேட்டுள்ளார்.

இதற்கமைய, எதிர்வரும் 10ஆம திகதிக்கு முன்பாக தாம் அந்தப் பணிகளை நிறைவேற்றித் தருவதாக விடுதலைப்புலிகள் தம்மிடம் உறுதி யளித்துள்ளதாகவும் அமைச்சர் கூறி யுள்ளார்.

அதேவேளை, காணி விடயங் களை கையாளுவது தொடர்பாக அரசாங்க அதிபருடன் இணைந்து செயற்படுவதற்கு அமைச்சரின் முக் கிய அதிகாரிகள் சிலர் திருகோண மலைக்குஅனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

இவ்விருதரப்பு அறிககைகளின அடிப்படையில் எதிர்வரும் 24ஆம் திகதி காணி அமைச்சின் உயர் மட்ட மாநாடொன்று நடைபெறவுள்ளது.

எதிர் வரும் 26ஆம்திகதி விடுதலைப்புலிகளுடனான பேச்சு வார்த்தை திருமலை அரசாங்க அதிபர் பணிமனையில்நடைபெறும். இதில் விடுதலைப்புலிகளின் திருமலை அரசியல் துறைப்பொறுப்பாளர் திலக் உள்ளிட்ட இன்னும் பல முக் கியஸ்தர்களுடன் அமைச்சர் பேச்சு வார்த்தை நடத்துவார் என எதிர் பார்க்கப்படுகிறது.

திருகோணமலையில் இப் பணிகள் யாவும் நிறைவடைந்த பின்னர் மாத இறுதியளவில் வவுனியா, மன்னார்,யாழ்ப்பாணம், வன்னி ஆகிய பிரதேசங்களுக்கும் அமைச்சர் விஜ யம் செய்யவுள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யும அமைச்சர்,குருநகரில் இடம் பெயர்ந்த மீனவக்குடும்பங்களை மீளக்குடியமர்த்தும் வகையில் 450 வடுகள் அமைக்கும் நடவடிக்கையில ஈடுபடவுள்ளார்.

இதற்கான மூலப்பொருட்கள் கடல் மார்க்கமாகக் கொண்டு வரப்படவிருப்பதால் படையினரின் முழு ஒத்துழைப்பையும் அமைச்சர் இது விடயத்தில் பெற்றுள்ளார்.

அதிஉயர் பாதுகாப்பு வலயத் தின் ஒரு பகுதியிலேயே இந்த 450 வீடுகளும் அமைக்கப்படவுள்ளதாகத தெரிவிக்கப்படுகிறது. (உ-15)



கொழும்புத்தமிழ் சங்கத்தில் சுன்னாகம் இ.சிறிஸ்கந்த ராசாவின் ''நகைச் சுவைப்பு'ங்கா'' நூல் வெளியீடு நடைபெற்ற போது நிகழ்வின் தலைவர் கே. அரசரத்தினம், பிரபல அறி விப்பாளர் பி.எச்.அப்துல் ஹமீத்துக்கு நூல் பிரதியை வழங்கு வதையும் நடுவில் நூலாசிரியர் நிற்பதையும் நிகழ்ச்சிக்கு வருகை தந்திருந்த சபையோரையும் படங்களில் காணலாம்.

# உலகின் எந்த இலக்கையும் 2 மணி நேரத்தில் தாக்கியழிக்கும் அதிவேக ஆளில்லா விமானம்

## அமெரிக்கா தயாரிக்க ஆலோசனை

(நியுயோர்க்)

**அமெரிக்கத் தளமொன்றிலிருந்து புறப்பட்ட இரண்டு மணிநேரத்தில் வெகு தொலைவிலுள்ள இலக்குகளை அச்சொட்டாகத் தாக்கி அழிக்கக் கூடிய அதிநவீன ஆளில்லா விமானமொன்றை தயாரிக்க பென்ரகன் ஆய்வாளர்கள் ஆலோசித்து வருகின்றனர்.**

பிற நாடுகளில் வான் பரப்புக்க ளின் மீது பறப்பதற்கு அனுமதி கேட்டு காத்துக்கொண்டிருக்காமல் அமெரிக்க அதிகாரத்தை உலகம் முழுவதும் செலுத்துவதற்கான அவசரத் தேவைகள் ஏற்பட்டு வருவதால் இம்மாதிரியான சுப்பர்சொனிக் விமானங்கள் தேவை என பென்ரகன் அதிகாரிகள் கருதுகின்றனர்.

அமெரிக்க பாதுகாப்பு முன்னேற்ற ஆய்வுத் திட்ட அமைப்பும் விமானப் படையும் சேர்ந்து இவ்வாறான ஒரு விமானம் தேவை என அறிக்கை சமர்ப்பித்துள்ளன.

பொஸ்னியா, ஆப்கானிஸ்தான், ஈராக் போன்ற நாடுகளின் மீது அண்மையில் நடவடிக்கைகள் எடுத்த போது இப்படியான அதிநவீன ரக விமானங்களின் அவசியம் உணரப்பட்டதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இந்த நூற்றாண்டில் உலகின் எந்தவொரு மூலையிலிருந்தும் எழக்கூடிய அச்சுறுத்தலைத் தவிர்க்க இப்படியான பாதுகாப்பு விமானம் இருப்பது அவசியம் என்று அவர்கள் கருதுகின்றனர். அணுவாயுதப் பாதுகாப்புடன் இப்படியான விமானம் இருக்க வேண்டியதன் அவசியத்தை அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (பி)



மேற்கு வங்கத்தில் உள்ள உதயன் தொழுநோயாளிகள் சிறுவர் இல்லத்திற்கு அவுஸ்திரேலிய கிரிக்கெட் டெஸ்ட் அணித் தலைவர் ஸ்டீவ் வோ சென்று பார்வையிட்டார். அவர் அங்குள்ள ஒரு குழந்தையுடன் காணப்படுகின்றார்.

# சில்லி நாட்டின் கரையில் ஒதுங்கியுள்ள கடற்பிராணி

(சந்தியாகோ)

12 மீற்றர் அகலம் (40 அடி) கொண்ட கடல்வாழ் பிராணி ஒன்றின உடல் சில்லி நாட்டின் கடற்கரையில் ஒதுங்கியுள்ளது.

சுமார் 1 நூற்றாண்டுக்கு முன்னர் கரையில் ஒதுங்கிய 'ஒக்டோபஸ்' என்றழைக்கப்படும் எட்டு உறுப்புக்கள் கொண்ட கடற்பிராணியின் மிகுதிப் பகுதியாக இது இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

ஒரு வாரத்திற்கு முன்னர் கடற்கரையில் இந்தப் பிராணியின் 13 தொன் பாரமுள்ள உடல் ஒதுங்கிய போது, அது ஒரு திமிங்கிலத்தின் உடலாக இருக்கலாம் என்று கருதப்பட்டது. ஆனால் இதற்கு முள்ளந்தண்டு இருப்பதாகத் தெரியவில்லை. எனவே இது ஒரு ஒக்டோபஸ் அல்லது அதுபோன்ற 8 அவயவங்கள் கொண்ட பிராணியாகத்தான் இருக்கும் என்று கடல்வாழ் உயிரினங்கள் பற்றிய ஆய்வு நடத்தும் உயிரியல் விஞ்ஞானியான எல்சா கப்நேரா கூறியுள்ளார்.

1896ஆம் ஆண்டு புளோரிடாவில் கரை ஒதுங்கியதாகக் கூறப்படும் ராட்சத பிராணி பற்றிய விபரணங்களுடன் ஒப்பிடக்கூடிதாக இது இருப்பதால், அந்தப் பிராணியின் பிரிவைச் சேர்ந்ததாக இது இருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

அதற்கு 'ஒக்டோபஸ் ஜைஜான்டியஸ்' எனப் பெயரிடப்பட்டிருந்தது. (பி)

# 150 பேர் கொண்ட பாகிஸ்தானின் வர்த்தகக் குழு புதுடில்லி விஜயம்

(புதுடில்லி)

இந்தியாவிற்கும் பாகிஸ்தானிற்குமிடையே இருதரப்புப் பொருளாதார ஒத்துழைப்பு வாய்ப்புக்களைக் கண்டறிவதற்காக பாகிஸ்தானிலிருந்து 150 பேர் கொண்ட பாரிய வர்த்தகப் பிரதிநிதிகள் குழுவொன்று நேற்றுப் புதுடில்லி வந்தடைந்துள்ளது.

பாகிஸ்தான் செனட் உறுப்பினர் இம்தியாஸ் அகமட், பீவேட் தலைமையிலான இந்த 150 பேர் கொண்ட குழு அடுத்த வாரம் நடைபெறவிருக்கும் இந்திய- பாகிஸ்தான வர்த்தகச் சங்கக் கூட்டத்தில் கலந்து கொள்ளும். இதன்போது இரு நாடுகளுக்குமிடையில் பல வர்த்தக ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகுமென இக்குழு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

பாகிஸ்தான் பொருளாதாரத்துடன் நெருங்கிய தொடர்புடையவர்கள் அனை[illegible]ரும் இக்குழுவில் இணைந்துள்ள[illegible]ர்கள் என்றும் மிகவும் வேண்டப்ப[illegible]ட நாடு என்ற அந்தஸ்தை இந்[illegible]ாவிற்கு வழங்க பாகிஸ்தான் [illegible]த்த சர்ச்சைக்குரிய பிரச்சினை[illegible]யும் இக் குழுக் கூட்டத்தில் மு[illegible]வைக்கப்படும் என இந்திய தொழி[illegible] மற்றும் வணிக நிறுவனங்களி[illegible] துணை இயக்குநர் திருமதி அமிர்தா டர்க்கார் கூறியுள்ளார். (பி-2)

# ஆசிய நாடுகளை அச்சுறுத்தும் -எயிட்ஸ் நோய் அபாயம்-

(வாஷிங்டன்)

சீனா, இந்தியா மற்றும் கம்போடியா ஆகிய நாடுகள் எயிட்ஸ் நோயினால் பாரிய விளைவுகளை எதிர்நோக்குமென்று அமெரிக்காவிலிருக்கின்ற நோய் கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்திருக்கின்றது.

குறிப்பாக ஆசிய பிராந்தியத்தின் சுகாதாரத்துறையில் பலவீனம் காணப்படுவதன் காரணமாகவே இந்த நிலை தோன்றியிருப்பதாக அந்த நிலையம் கூறுகின்றது.

சீனாவில் சுமார் 10 லட்சம் பேர் எச்.ஐ.வி வைரசினால் பீடிக்கப்பட்டிருக்கின்றார்கள். அடுத்த 7 ஆண்டுகளுக்குள் இந்த எண்ணிக்கை 10 மடங்காக அதிகரிக்கும் என்று ஐ.நா அமைப்பு தெரிவித்திருக்கின்றது.

இந்தியாவிலும் கம்போடியாவிலும் இதே நிலை காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் அறிக்கைகளின் படி உலகம் முழுவதும் 42 மில்லியன் மக்கள் எச்.ஐ.வி வைரசினால் பீடிக்கப்பட்டிருக்கின்றனர்.

இதில் 29.4 மில்லியன் மக்கள் ஆபிரிக்காவில் வசிக்கின்றனர். அத்துடன் உலகம் முழுவதும் எயிட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டவர்களில் சுமார் 2 கோடி 50 லட்சம் பேர் உயிரிழந்திருக்கின்றனர்.

2010ஆம் ஆண்டளவில் மேலும் 45 மில்லியன் மக்கள் எயிட்ஸினால் பீடிக்கப்படுவார்கள் என்றும் 2020ஆம் ஆண்டளவில் 70 மில்லியன் மக்கள் எயிட்ஸினால் உயிரிழப்பார்கள் என்றும் ஐ.நா. அமைப்பு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. (பி-9)

# ஆந்திரா விண்கோள் ஏவும் மையத்தில் தீ விபத்து

(சென்னை)

தமிழக ஆந்திரா எல்லைப் பகுதியில் அமைந்திருக்கும் விண்கோள் ஏவுமையத்தில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விண்கோள் ஏவு மையம் அடர்ந்த காடுகளின் மத்தியில் அமைந்திருப்பதால் அக்காட்டில் ஏற்பட்ட திடீர் தீயே இவ்விண்கோள் ஏவுமையத்தில் பற்றிக் கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் இத் தீ பாதிப்புகள் ஏற்படுவதற்கு முன்னரே அணைக்கப்பட்டு விட்டதாக இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம் அறிவித்துள்ளது.


இந்தியாவின் விண்கோள்களான பி.எஸ்.எல்.வி மற்றும் ஜீ.எஸ்.எல்.வி ஆகியன இந்த தீ விபத்து ஏற்பட்ட மையத்திலிருந்து விண்ணுக்குச் செலுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (பி-2)

# சதாம் பற்றிய தகவல் தந்தால் ரூ. 115 கோடி பரிசு

(பக்தாத்)

ஈராக் அதிபர் பதவியில் இருந்து கவிழ்க்கப்பட்ட சதாம் ஹுசைன் குறித்து தகவல் தெரிந்தால் ரூபா 115 கோடி பரிசளிக்கப்படும் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

தகவல் தரும் ஈராக்கியருக்கு இத்தொகை வழங்கப்படும் என்று அமெரிக்க அதிகாரி பால் பிரமர் தெரிவித்தார். சதாம் ஹுசைனினன் மகன்கள் உதய், காஸ்ஸி ஆகியோர் குறித்த தகவலுக்கு ரூபா 70 கோடி வரை பரிசளிக்கப்படும் என்று தெரிவித்தார். (பி)



பாகிஸ்தானைச் சேர்ந்த முகமது முர்தா என்பவர் தனது செருப்பு தொழிற்சாலையின் முன்பு பார்வைக்கு வைப்பதற்காக இச் செருப்பை தயாரித்துள்ளார். இதன் நீளம் 12.9 அடி, அகலம் 4.8 அடி கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்திருக்கும் இச்செருப்பை கடையின் முன்பு வைக்க ஊழியர்கள் தூக்கி வருகின்றனர்.

WORLD NEWS உலக தரிசனம்

# வேறு இடங்களில் இருந்து இப்போது வாபஸ் இல்லை

## இஸ்ரேலிய அமைச்சர்

(ஜெருசலேம்)

மேற்குக் கரை, காஸா குன்றுப் பகுதிகளில் புதிதாக வேறெந்த நகரிலும் இருந்து உடனடியாக படைகளை வாபஸ் பெறுவதற்கான வாய்ப்பு இல்லை என்று இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் ஷவூல் மொபாஸ் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைக் கூட்டத்தில் பேசிய மொபாஸ் இவ்வாறு கூறியுள்ளார்.

புதிதாக வேறெந்த நகரில் [illegible]ந்தும் படைகளை வாபஸ் பெ[illegible]று அப்பகுதியை பலஸ்தீனத்திடம் [illegible] டைக்கமாட்டோம் சிறிது காலத்திற்குப் பிறகே இதுபற்றி பரிசீலிக்கப்படும் என்றார் அவர். (பி)

# ஈராக்குக்கு சீனா படை அனுப்புமா?

(பெய்ஜிங்)

ஈராக்கில் அமைதி காப்புப் பணியில் ஈடுபட, சீனா தனது படைகளை அனுப்புமா என்று தெரியவில்லை.

படைகளை அனுப்ப மாட்டோம் என்று திட்டவட்டமாக அது அறிவிக்கவில்லை. இதேசமயம் படைகளை அனுப்பத் தயார் என்பதைப் போல காட்டிக் கொள்ளவும் இல்லை.

இந்நிலையில் சீன வெளியுறவு அதிகாரி கோங் குவான் நிருபர்களை பெய்ஜிங்கில் வியாழக் கிழமை சந்தித்தார்.

பக்தாத் நகரை மீண்டும் புதிதாக நிர்மாணிக்கவும் உணவுக்காக எண்ணெய் என்ற ஐ.நா. திட்டத்தை ஆறு மாதங்களுள் ரத்துச் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார். (பி)

# புதைக்கப்பட்ட குழந்தை 15 மணி நேரத்தில் உயிருடன் மீட்பு

(புதுடில்லி)

உயிருடன் புதைக்கப்பட்ட சிசுவை 15 மணி நேரத்தின் பின் பொலிசார் உயிருடன் மீட்டுள்ளனர். ஏற்கனவே 2 பெண் குழந்தைகள் இருப்பதால் 3வதாக பிறந்த பெண் சிசுவை அதன் தந்தை நிலத்தில் புதைத்துள்ளார். மத்தியப் பிரதேசத்தில் இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது. குழந்தை மீட்கப்பட்ட போது அழுதுகொண்டிருந்தது. புதைத்த இடத்தில் கற்களின் இடைவெளிகள் இருந்தமையால் குழந்தைக்கு பிராணவாயு கிடைத்து உயிர் தப்பியுள்ளது என்று பொலிஸார் கூறியுள்ளனர். (பி)

## சிறு விளம்பரம்

### மணமகன் தேவை

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பணிபுரியும் படித்த மணமகள்களுக்கு A/L படித்த அல்லது பட்டதாரி மணமகன்கள் உடன் தேவை. ஜாதகம், போட்டோ உட்பட உடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி நா.கந்தையா, சோமசுந்தரம்வீதி, ஆனைக்கோட்டை. (7205)

### விற்பனைக்கு

202 - 801 இலக்கமுள்ள ஆட்டோவும் GJ 0381 இலக்கமுள்ள CD 125 மோட்டார் சைக்கிளும் விற்பனைக்குண்டு. கிருஸ்ணமூர்த்தி 114/19 நாவலர் வீதி, (தேவி அச்சக ஒழுங்கை), யாழ்ப்பாணம். போன்: 2789 (7227)

ஆனிக்கொய்யா (Butter Fruit) கன்றுகள் விற்பனைக்கு உண்டு. இல.5 சீனியர் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம். (7226)

டீசல் என்ஜின் (PETER) பெட்டர் 4 CYLINDERS 50 CXLLES 400/440 VOUS 25 KVA ஜெனரேட்டர். தொடர்புகொள்ளவேண்டியமுகவரி:- கப்டன் V.ஜெயசந்திரா V.V.T. வல்வெட்டித்துறை. (6383)

# சமாதான முயற்சிகளில் பங்கேற்க ஐரோப்பிய ஆணைக்குழு விருப்பம்

(கொழும்பு)

இலங்கையின் சமாதான முயற்சிகளிலும், புனரமைப்புப் பணிகளிலும் பங்கேற்றுக்கொள்வதற்கு ஐரோப்பிய ஆணைக்குழு விருப்பம் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய பாராளுமன்றக்கூட்டத்தில், ஐரோப்பிய ஆணைக்குழுவின் வெளிவிவகாரங்களுக்குப் பொறுப்பான அதிகாரியை விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் மிலிந்த மொறக் கொடவைச் சந்தித்த போது இவ் விருப்பம் தெரிவிக்கப்பட்டது.

இச்சந்திப்பில் தொடர்ந்தும் கருத்துக் கூறிய அவர், டோக்கியோ மாநாட்டில் கிடைத்த நிதி உதவியில் 5கோடி யூரோக்களை திருப்பிச் செலுத்த வேண்டியதில்லை.

ஏனைய நிதிஉதவிகள் குறிப்பிட்ட தவணை அடிப்படையிலும், குறைந்த சட்டவிரோத சலுகை அடிபடையிலும் வழங்கப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

# அத்துமீறி நுழைந்த 6 இந்திய படகோட்டிகளையும் திருப்பி அனுப்ப உத்தரவு

தலை மன்னார் கடலில் அத்துமீறி நுழைந்த இந்தியப்படகோட்டிகள் ஆறுபேரையும் இந்தியாவுக்குத் திருப்பி அனுப்புமாறு மன்னார் நீதிமன்ற நீதிபதி அப்துல்லா நேற்று உத்தரவிட்டுள்ளார்.

இந்த ஆறு இந்தியப்படகோட்டிகளையும் மன்னார் அரச அதிபர் ஊடாகவே இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பவேண்டும் என்றும் இந்திய மீனவர்கள் மீண்டும் இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று நீதவான் எச்சரித்ததுடன் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களையும் தமிழகத்திற்குத் திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (வ)

## பிரமுக வங்கி விவகாரம்

# மத்திய வங்கியின் உத்தரவை மேன்முறையீட்டு நீதிமன்றம் ரத்து

(கொழும்பு)

பிரமுக சேமிப்பு அபிவிருத்தி வங்கியின் செயற்பாடுகளை தடை செய்து 2002 டிசம்பர் 19 ஆம் திகதி இலங்கை மத்திய வங்கி விதித்திருந்த உத்தரவை கடந்த புதன் கிழமை மேன்முறையீட்டு நீதிமன்றம் ரத்துச் செய்துள்ளது.

பிரமுக வங்கியின் வைப்பாளர்கள் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுமீது மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் கே.ஸ்ரீபவன் மேற்கண்டவாறு தீர்ப்பை வழங்கினார்.

மத்திய வங்கியானது சட்டப்படியான தனது கடமைகளை நிறைவேற்றத் தவறியிருந்தது. வங்கிச் சட்ட விதிகளின்படி நடவடிக்கை எடுப்பதற்கு தவறியதனால் ஏற்பட்ட விடுபாடுகளை மூடிமறைக்கும் வகையில் அதி தீவிரமான நடவடிக்கையான வங்கியின் அனுமதியை ரத்துச் செய்யும் தீர்மானத்தை எடுத்திருந்தது என்று மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதனால், அனுமதியை ரத்துச் செய்தமை சட்டப்படியான அதிகாரங்களை உண்மையான முறையில் பிரயோகித்த செயலாகாது என்றும் மனுவில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

மத்திய வங்கியின் நாணய சபைக்கு பல்வேறு வகையான மாற்று யோசனைகள் இருந்தன. சில நிபந்தனைகளின் பேரில் பிரமுக வங்கியை தனது நடவடிக்கைகளைத் தொடர அனுமதிக்க முடியும். அத்துடன், இருந்திருக்கக்கூடிய மாற்று வழிகளை ஈடுபடுத்தியதாக போதிய சான்றுகளை மத்தியவங்கி வழங்கியிருக்கவில்லை என்று நீதியரசர் தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார். (உ)

# தமிழீழ போக்குவரத்துக் கழகம் விசேட பஸ்சேவை

(தென்மராட்சி)

கடந்த பன்னிரண்டு வருடங்களின் பின்னர் கேதீஸ்வரம் ஆலயத்தில் இடம்பெறவுள்ள கும்பாபிஷேகத்தில் பங்குகொண்டு சமயச் சொற்பொழிவுகளை நடாத்துவதற்கென தஞ்சைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் ஈ.சுந்தரமூர்த்தி, தஞ்சைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் க.பாஸ்கரன், சென்னைப் பல்கலைக்கழகத்தின் சித்தாந்தத்துறை தலைவர் பேராசிரியர் பொ.கிருஸ்ணன் ஆகியோரும் திருமுறை ஓதுவதற்கென திருப்பரங்குன்றத்திலுள்ள காசி மடத்தைச் சேர்ந்த கலைமாமணி சோ.முத்துக்குமாரசுவாமி ஆகியோர் வருகை தருகின்றனர்.

இவ் ஆலயம் சுமார் 2 கோடி ரூபா செலவில் அண்மையில் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை, திருக்கேதீஸ்வர ஆலயத்தின் கும்பாபிஷேகத்தில் பங்குகொள்ளும் பக்தர்களின்வசதி கருதி தமிழீழ போக்குவரத்துக் கழகம் முகமாலையில் இருந்து விசேட பஸ் சேவைகளை இரு தினங்களுக்கு நடாத்தவுள்ளதாகவும் தெரியவருகின்றது. (உ-77)

# போராளி சத்தியராஜ் நேற்று பிணையில் விடுவிப்பு

(மட்டக்களப்பு)

சந்தேகத்தின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு புதுநகர் பிரதேச அரசியல் பொறுப்பாளர் சத்தியராஜ் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த மே மாதம் 19ஆம் திகதி குருநகரில் தேசிய துணைப்படை வீரர் கதிர்காமத்தம்பி நவசூரியம் என்பவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக கடந்த மாதம் 6ஆம் திகதி சந்தேகத்தின் பிரகாரம் மட்டக்களப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சத்தியராஜ் எனப்படும் தவராசா சுபாஷ்கரன் அன்றுமுதல் மட்டக்களப்பு நீதிமன்ற உத்தரவின் படி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இவர் தன்னை பிணையில் விடுதலை செய்யக்கோரி மட்டக்களப்பு - திருகோணமலை மேல்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணை நேற்று திருகோணமலை மேல் நீதிமன்ற அமர்வில் நடைபெற்றது.

இதில் அரச தரப்பு சட்டத்தரணி முன்வைத்த பிணை தொடர்பான ஆட்சேபனை மற்றும் சாட்சியங்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கக் கூடாது என்ற நிபந்தனையின் பேரில் பிணை வழங்குவது ஆட்சேபனை இல்லை என பொலிஸார் சமர்ப்பித்த அறிக்கை ஆகியவற்றைப் பரிசீலித்த மேல் நீதி மன்ற நீதிபதி எஸ்.பரமராசா;

-சாட்சிகளுக்கு அச்சுறுத்தல் விடுக்கக்கூடாது.

-நீதிமன்ற முன் அனுமதியின்றி நாட்டை விட்டு வெளியேறக்கூடாது என்ற நிபந்தனைகளுடன் ரூபா 10 ஆயிரம் ரொக்கம் மற்றும் ரூபா 50 ஆயிரம்பெறுமதியான இரண்டு ஆட் பிணையிலும் செல்ல நீதிபதி அனுமதியளித்தார்.

நீதிமன்ற முன் அனுமதியின்றி நாட்டை விட்டு வெளியேறக்கூடாது என்ற உத்தரவை குடியகல்வுத் திணைக் களத்திணை விடுக்குமாறு நீதபதி உத்தரவு இட்டுள்ளார்.

இதேவேளை, கடந்த மாதம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் ஆயுதங்களுடன் ஊடுருவிய சமயம் கைது செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள்களான எம். சேனாதீர, பி.எஸ். நிகால் ஆகியோர் சத்தியராஜ் விடுதலை செய்யப்பட்டால் மாத்திரமே விடுவிக்கப்படுவர் என அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

இது பற்றி மட்டக்களப்பு மாவட்ட புலிகளின் ஊடகப்பேச்சாளர் கிருஷன் கருத்துக்கூறுகையில்,

சத்தியராஜ் பிணையிலே விடுவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸாரின் விடுதலைதொடர்பில் இது வரை தாம தீர்மானம் எதையும் எடுக்கவில்லை என்றார். (உ)

## ஆன்மீக சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

செல்லக் கதிர்காம ஆலய மஹோற்சவகால ஆன்மீகத் தொடர் சொற் பொழிவில் இன்று சனிக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியர் ந.விஜயசுந்தரம் ''உதித்தன் உலகம் உய்ய'' என்னும் தலைப்பில் உரையாற்றவுள்ளார். (உ-8)

# மணிபல்லவத்தில் மஹோற்சவம்

## இன்று ஏழாம் திருவிழா



# நயினை நாகபூசணி அம்மன் பாமாலை

### மங்களம் பொங்கிட வந்தாளே

அலைகடல் நடுவே அருள்மழை சொரியும்
அம்பா! நாகபூஷணித்தாயே - பக்தி
வலைப்பட்ட பக்தரின் ஆருயிர்த் தாயே
வந்தருள் செய்வாய் சரணம் சரணம்.

நீலக் கடல்வலம் வந்து வணங்க
நிமலினி நின்னை நாகமலர் கொண்டு
காலமெல்லாம் அர்ச்சிக்க நயினா தீவில்
கோயில்கொண்ட நாகபூஷணியே சரணம்.

கதிரவன் பொற்கரத்தால் சாமரை வீச
கடலலை நறுமணம் பன்னீர் தெளிக்க
மதியும் பூரண கும்பம் ஏந்த
மங்களம் பொங்க நயினை வந்தனையே

கலைமகள் வெண்பொற் றக்குடை பிடிக்க
கருங்கடல் வெண்திரை ஏந்தி வரவே
அலைமகள் மலைமகள் இருமருங்கும் கட்டியம்
கூறநா கபூசணியே வீதிவலம் வருவாய்.

மாதாஜி

### நீயருள வேண்டுமம்மா

*அம்பிகையை தினமும்*
*வணங்கிவந்தால்*
*அருள்மிகப் பொழிவாள்!*
*அலைகள் புரளும்*
*ஆழியுள் நடுவே*
*நயினையம்பதியில்*
*கோயில் கொண்டாய்*

*நாகபூசணியே*
*நம்தமிழர் படு*
*துயர்நீக்கி*
*நமை நாமேயாள*
*நல்வரமொன்று*
*நீயருளவேண்டுமம்மா*
*நாகபூசணியே தாயே!*

மாருதி ஆவரங்கால்

### திருக்கோலம் காட்டிக் காத்திடம்மா

தாயாகி எம்மை என்றும் காப்பவளே
தரணியெங்கும் புகழ்கொண்ட
–நாகம்மையே
சேயான நானுந்தன் அருள் வேண்டினேன்
–எந்தன்
சிந்தையில் வைத்துன்னை தினம் பாடினேன்
நோயாகி நொடியினில் வீழ்ந்தபோதும்
–யாரும்
நினைத்திட்டால் உடன்வந்து காப்பவளே
ஓயாத அலைபொங்கும் கடலோரத்தில்
ஒளிதரும் சக்தியாய் அமர்ந்தவளே
தீயாகி தீமைகள் யாவையும் சுட்டெரித்து
– உந்தன்
திருக்கோலம் காட்டி எம்மைக் காத்திடம்மா.

மு.முத்துக்குமார் மானிப்பாய்

**ஆலய மண்டபத்தில் இன்று ஆன்மீக சொற்பொழிவு**

திரு. ந. விஜயசுந்தரம்
(யாழ். கொக்குவில் இந்துக்கல்லூரி ஆசிரியர்)

## இன்று ஒரு தகவல்

# சொந்த சிந்தனை

அவன் ஆயிரம் சொல்வான். உன் புத்தி எங்கே போய் விட்டது. அப்படி என்று யாராவது உங்களைத் திட்டியிருக்கிறார்களா? மற்றவர்கள் அப்படி சொல்லும் அளவிற்கு நீங்கள் எப்பொழுதாவது நடந்திருக்கிறீர்களா? அப்படிஎன்றால் இதைக் கொஞ்சம் கேளுங்கள்.

ஒரு ஊரிலே ஒருவர் புதிதாக ஒரு மீன்கடை ஆரம்பித்தார். புதிதாகக்கடை திறந்தார். அது எல்லோருக்கும் தெரிய வேண்டும் இல்லையா? அதற்கு என்ன செய்யலாம் என்று யோசித்தார். உடனே விளம்பரப் பலகை ஒன்று தயார் செய்தார். அதலே அழகான ஓர் மீன் படத்தை வரைந்தார். அதற்கு கீழே நல்ல மீன் இங்கே விற்கப்படும் என்று எழுதி அந்தப் பலகையை கடை வாசலிலே வைத்து விட்டார்.

இது வரைக்கும் சரி. அதன் பிறகு என்ன நடந்தது தெரியுமா. அவன் சினேகிதன் ஒருவன் அந்தப்பக்கமாக வந்தான். இந்த பலகையைப் பார்த்தான். அதன் பின் கடைக்காரனைப்பார்த்தான்.

ஏனப்பா நீ வேறு எங்காவது கடைவைத்திருக்கின்றாயா? என்று கேட்டான். இல்லை என்றான் கடைக்காரன். அப்படி என்றால் தேவையில்லாமல் என்னத்திற்கு இந்தப் பலகையில் ''இங்கே'' என்று ஓர் வார்த்தையைச் சேர்த்திருக்கின்றாய். அதை அழித்து விடு என்றான். கடைக்காரன் பார்த்தான் அவன் சொன்னதும் நியாயமாகத்தான் இருந்தது. உடனே அந்தவார்த்தையை அழித்து விட்டான். இப்போது படித்துப் பார்த்தான். மீன் படம் அதற்குக் கீழே ''நல்ல மீன் விற்கப்படும்'' என்று இருந்தது.

அடுத்ததாக இன்னொருவன் வந்தான். பலகையைப் பார்த்தான். பின் கடைக்காரனைப் பார்த்தான். ஏன் நீ கேட்டுப்போன மீனையும் விற்பது உண்டா என்று கேட்டான். இல்லை என்றான் இவன். அப்போது இதில் நல்ல என்ற ஒரு வார்த்தையை அழித்து விடு என்றான் அதுவும் சரியாகத்தான் இருந்தது. அழித்து விட்டான் இப்போது அந்தப் பலகையிலே மீன் படம் அதற்கு கீழே ''மீன் விற்கப்படும்''யூ அவ்வளவு தான்.

பின் இன்னொருவன் வந்தான். பலகையைப் பார்த்தான். அப்போது நிமிர்ந்து கடைக்காரனைப்பார்த்தான். ஏனப்பா அது தான் மீன் என்று எழுதியிருக்கின்றாயே பின் எதற்காக மீன் படம் அதற்கு மேலே வேண்டாம் என்றான். அதுவும் சரி என்று நினைத்தான் இவன். அதனுடன் விடப்பட்டதா. அடுத்தாற்போல் இன்னொருவன் வந்தான். என்னப்பா மீனை யாருக்காவது இனாமா வேறு யாருக்கும் கொடுத்துக்கொண்டிருக்கிறியா? என்றான். இல்லையே என்றான் இவன். அப்போது எதற்காக விற்கப்படும் என்று ஓர்வார்த்தை அதிலே என்றான். சரி என்று இவன் அதையும் அழித்து விட்டான். இப்போது அந்தப் பலகையிலே மீன் எனும் ஒரே வார்த்தைதான் இருந்தது.

அடுத்ததாக இன்னொருவன் வந்தான். என்னப்பா அது தான் தூரத்திலே வரவே மீனுடைய வாசனை மூக்கைத் துளைக்கிறதே? அது போதாதா. மீன் என்று பலகையில் எழுதி வைக்கவேண்டுமா என்றான். கடைக்காரன் அதையும் அழித்து விட்டு வெறும் பலகையை வைத்துக் கொண்டு அமர்ந்திருந்தான்.

இப்போது இன்னொருவன் வந்தான். ஏனப்பா என்ன இப்படி கடைக்கு முன்னால் வெறும் பலகையை வைத்துக்கொண்டு அமர்ந்திருக்கின்றாய். இதிலே அழகாக ஒரு மீன் படம் வரைந்து அதற்குக் கீழே ''நல்ல மீன் இங்கே விற்கப்படும்'' என்று எழுதி வைத்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்றான். அந்தக் கடைக்காரனுக்கு இதுவும் ஓர் நல்லயோசனையாகத்தான் இருந்தது. இப்படிப்பட்ட ஆசாமிகளிற்கு பலகையை அழித்து எழுதிக் கொண்டிருந்தால் தான் நேரம் சரியாக இருக்கும் வியாபாரத்தைக் கவனிப்பதற்கு நேரம் இருக்காது.

அடுத்தவர்கள் சொல்வதைக் கேட்கக்கூடாது என்று நான் சொல்ல வரவில்லை. கேட்டு அதன் படி நடப்பதற்கு முன் கொஞ்சம் சொந்தமாகவும் சிந்திக்கவேண்டும்.

''எண்ணித்துணிக கருமம்'' என்று தான் திருவள்ளுவர் சொன்னார். கேட்டுத்துணிக கருமம் என்று சொல்லவில்லை. இப்போது நெருப்பைத் தொட்டு கையைச் சுட்டுவிட்டீர்கள். என்ன இப்படிச் சுட்டு விட்டீர்களே என்று கேட்டார். அடுத்த வீட்டுக்காரன் தான் சொன்னான் நெருப்பைத் தொட்டுபார்க்கச் சொல்லி, அது தான் தொட்டுப்பார்த்தேன் என்று சொல்வீர்கள். இப்போது மருந்து போடுவதற்கு அடுத்த வீட்டுக்காரனா வருவான்.

ஒருவர் சின்ன வீடாக சிம்பிளாக ஒரு வீடு கட்ட ஆரம்பித்தார். கூரை வீடு போதும் என்று நினைத்தார். ஒருவர் கூறினார். அத்திபாரத்தைப் பலமாகப் போடு என்று. இவரும் பலமாகப் போட்டார். இன்னொருவர் சொன்னார். அத்திபாரம் பலமாகப் போட்டாயிற்று அதற்கு மேலே எதற்கு மண் சுவரை எழுப்ப வேண்டும். செங்கல் சுவரை எழுப்பு என்றார். செங்கல் வைத்து சுவர் எழுப்பியதற்குப் பின் பு'சாமல் இருந்தால் நன்றாக இருக்காது சீமெந்து வாங்கிப் பு'சிவிடு என்றார் இன்னொருவர்.

இவ்வளவு தூரம் ஆகிவிட்டது, இதற்கு மேலே கூரையைப் போட்டால் நன்றாக இருக்காது. ஓட்டு வீடாகவே ஆக்கிவிடுவது நல்லது என்றார் இன்னொருத்தர். எல்லோரும் சொல்வது இவருக்கு நியாயமாகவே தெரிந்தது. அப்படியே செய்தார்.

கொஞ்ச நாள் கழித்து ஓர் கடைத் தெருவிலே அந்த ஆள் நின்று கொண்டிருந்தார். என்ன இப்ப எந்த மட்டத்திலே இருக்கு என்று கேட்டார் ஒருவர். தலைக்கு மேலே போய்விட்டது என்றார். வீடடைக் கட்டியவர் எது வடா என்று கேட்டார் இவர். இல்லைக் கடன் என்று சொன்னார் அவர். சொந்த சிந்தனை இல்லை யென்றால் இப்படித்தான் என்றார்யூ

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# தெல்லிப்பழைக் கல்விக் கோட்ட ஆங்கில தின போட்டி முடிவுகள்

(உடுவில்)

கடந்த புதனன்று மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் இடம்பெற்ற, தெல்லிப்பழைக் கல்விக்கோட்ட ஆங்கில தினமுதல் நாள்போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

அதன் விபரம் வருமாறு,

**பார்த்து எழுதுதல் -தரம் 3**

1ம்இடம்கே.ஜஸ்மிதா-மல்லாகம் கனிஷ்ட வித்தி.
2ம்இடம்-பி.துஸ்யந்தன்-மயிலிட்டி றோ.க.த.க
3ம்.இடம்-எஸ். லக்சனா-வசாவிளான் ம.ம.வி.

**உறுப்பெழுத்து-தரம் 4**

கே.வினோ-அளவெட்டிதெற்கு றோ.க.த.க.
கே.சோபனா-அளவெட்டி அருணோதயாக்கல்லூரி
ரி.திசைப்போலா-அளவெட்டி தெற்கு றோ.க.த.க

**தரம்-05**

எஸ்.சுகன்யா-மல்லாகம் கனிஷ்ட ம.வி.
எ. அர்ச்சனா- அளவெட்டி அருணோதயாக்கல்லூரி
ரி.ஜெயரதி-மல்லாகம்கனிஷ்ட ம.வி.

**தரம்-06**

என்.நிவிதா- தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி
ஏ.சங்கீதா- தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி
எஸ். ரம்ஜா- தெல்லிப்பழை யூனியன்கல்லூரி.

**தரம்-7**

வை. கார்த்திகா- தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி
எஸ். ஜனாநிதா-தெல்லிப்பழை யூனியன கல்லூரி
ப.வாசந்தி- தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி

**தரம்-8**

எஸ். ஜீவனா-தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி
என்.விந்துஜா-தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி
எஸ்.அபிராமி-தெல்லிப்பழை யூனியன் கல்லூரி

**தரம்-09**

பி.ரதிக்கா-தெல்லிப்பழை யூனியன் கல்லூரி
கே. பிரியதர்சினி-அளவெட்டி அருணோதயா கல்லூரி
எஸ். ராஜினி- தெல்லிப்பழை யூனியன் கல்லூரி

**கவிதை ஒப்புவித்தல் - தரம்11**

பி. நிசாந்தன் -வசாவிளான் ம.ம.வி
எஸ்.அகல்ஜா-வசாவிளான் ம.ம.வி
எ. கார்த்திகா- தெல்லிப்பழை யூனியன்

**தரம்-12**

என் .கிரணு-தெல்லிப்பழை மகாஜனாகல்லூரி
கே. அனுசியா-மல்லாகம் ம.ம.வி.
ஆர்.அனுசா-தெல்லிப்பழை யூனியன் கல்லூரி

**தரம் 13**

எஸ்.மேனகா- தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி
வி. பிரியா-தெல்லிப்பழை யூனியன் கல்லூரி
பி. நிறைஞ்சனா- தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி

**சொல்வதெழுதல்-தரம்06**

எம். டர்சனா-தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி
எஸ்.யதுகுலன்-தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி
ஜெ.கௌதமன்-தெல்லிப்பழை யூனியன் கல்லூரி

**தரம்-7**

எம் .கவியரசி-தெல்லிப்பழை மகாஜனாகல்லூரி
ஜே.சந்துருகேசன்-தெல்லிப்பழை யூனியன் கல்லூரி
எம்.கார்த்தாயினி-இளவாலை மெய்கண்டான்

**தரம்-8**

பி. நீதுஜன்-தெல்லிப்பழை மகாஜனாகல்லூரி
ஜி.பிருந்தா-தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி
என்.யுவரூபன்-தெல்லிப்பழை யூனியன் கல்லூரி

**தரம்-09**

கே. அனுஜா-தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி
ஏ.றுசாந்தி-தெல்லிப்பழை யூனியன் கல்லூரி
ஜி.சிவப்பிரியா-அளவெட்டி அருணோதயா கல்லூரி

**தரம்-10**

பி.பானுஜா-தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி
என்.நிரோஜினி-தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி
எஸ்.சோபிதா-தெல்லிப்பழை யூனியன கல்லூரி.

**தரம்-11**

டி.கவிதாஸ்-தெல்லிப்பழை யூனியன் கல்லூரி
ஆர். சர்மினி-தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி
எஸ்.துவாரகா-தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி

**கவிதை ஒப்புவித்தல் தரம் 03**

கே.கௌசிகன்-தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி
கே.ஜஸ்மிதா- மல்லாகம் கனிஷ்ட வித்தி.
எஸ்.லக்சனா-வசாவிளான் ம.ம.வி.

**தரம்-04**

கே.வர்சினி-தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி
எம்.திசப்போலா-அளவெட்டி தெற்கு றோ.க.
எஸ்.றுகல்ஜா-தந்தைசெல்வா

**தரம்-05**

எம்.சுபாங்கி-தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி
எ. ரதிபனா-தெல்லி பழை மகாஜனா கல்லூரி
எம்.நாகவதனி-தந்தை செல்வா ஆரம்பப்பாடசாலை

**சுய ஆக்கம் தரம்-07**

ஆர்.கலைவாணி-தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி
பி.பபிதா-தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி
கே. அனுஜா-தெல்லிப்பழை யூனியன் கல்லூரி

**தரம்-06**

கே.பிரணவன்-அளவெட்டி அருணோதயா கல்லூரி
பி.நீதுயன்-தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி
எஸ்.பிரணவன்தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி

**குழுப்பாடல் ஆரம்ப நிலை**

1ம்இடம்-அருணோதயாக்கல்லூரி
2ம்இடம்-தந்தை செல்வா.ஆரம்பப் படசாலை. (உ-261)

## இராசி பலன்

**05.07. 2003**
**(ஆனி 21, சனி)**

| | |
|---|---|
| சஷ்டி மு.இ. | 7.18 வரை |
| பு'ரம் பி.ப. | 1.26 வரை |
| இராகுகாலம்- | 8.57-10.27 |
| சுபநேரம்- | 2.57-4.27 |

குமார சஷ்டி விரதம்

**மேடம்**
காரிய இடையூறு, அஜீரணரோகம், வியாபாரவிருத்தி, பணத்தட்டுப்பாடு.

**இடபம்**
புத்தி சஞ்சலம், எடுத்தகாரியம் தாமதமாகும், சொல்வாக்குக்குறையும், தனவிரயம்.

**மிதுனம்**
நற்கீர்த்தி, சித்த சௌக்கியம் காரியநன்மை, போசனசுகம்.

**கடகம்**
எந்த காரியத்திலும் தடைதாமதம், அதிக வார்த்தை, பேரினசுகக்குறைவு, உஷ்ண நிலை.

**சிங்கம்**
வெகுமானம், பெரியோர் சந்திப்பு, எண்ணங்கள் சித்தியாகும், பிரயணம்.

**கன்னி**
சோம்பல் நிலை, பணியாளர் உதவி, காரிய அலைச்சல், நல்ல திருப்பம்.

**துலாம்**
சினேகிதர் நல்வரவு, தனதானியம் சேரும், காரிய நன்மை, குடும்ப சுகம்.

**விருச்சிகம்**
நன்கொடை, ஆரோக்கியம், மனமகிழ்ச்சி, காரிய அனுகூலம்.

**தனுசு**
உத்தியோக பங்கம், தேசாந்திர வாசம், மனப்பயம், எதிர் பாராத செலவு.

**மகரம்**
உறவினர் மனஸ்தாபம், முழாங்கால்வலி, பொருள் நாசம், முயற்சி தடங்கல்.

**கும்பம்**
களஸ்திர நன்மை, சௌபாக்கியம், எடுத்த காரியம் கைகூடும், தெய்வ சிந்தனை.

**மீனம்**
பகைவரால் நன்மை, சந்தோசமானசம்பவம், முயற்சி கைகூடும், பூர்வ புண்ணிய கருமம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)
- வளவன்.

## சமாதானத்தின் பால்
# இலங்கைக்குள்ள ஈடுபாடு குறித்து ஐரோ. ஒன்றிய நாடுகளுக்கு விளக்கம்

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்று வந்த நீண்ட கால யுத்தத்திற்கு முற்றுப் புள்ளி வைக்கும்வகையிலான இலங்கை அரசின் சமாதான முயற்சிகளுக்கான அற்பணிப்புகள் குறித்து ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு தெளிவுபடுத்தவுள்ளதாக ஒன்றியத்தின் இராஜதந்திரி உறவுகளுக்கான ஆணையாளர் கிறிஸ்தோபர் பந்தன் தெரிவித்துள்ளார். அமைச்சர் மிலிந்த மொறகொடவை சந்தித்த ஆணையாளர் கிறிஸ்தோபர் பந்தன் மேற்கண்டவாறு அவரிடம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் தற்போதைய சூழ்நிலையில் இவர்களை அரசு சமாதானம் மற்றும் புனர் வாழ்வு நடவடிக்கைகளில் கேட்டுள்ள ஈடுபாட்டை அவதானித்த பின்பே தான் இலங்கைக்கு விஜயம் செய்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார். (வ)

# கல்வயல் வீட்டருகே கண்ணிவெடி மீட்பு

(கல்வயல்)

சாவகச்சேரி கல்வயல் பகுதி வீடொன்றில் இருந்து கண்ணி வெடி மீட்டெடுக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி கல்வயலைச்சேர்ந்த சின்னப்பு என்பவருடைய வீட்டில் மலசலகூடத்துக்கு அருகில் மேற்படி கண்ணி வெடி ஒன்று காணப்பட்டதை தொடர்ந்து, அவ்விடத்திற்குச் சென்ற யாழ். செயலக கண்ணி வெடி அகற்றும் பிரிவினர் அக் கண்ணி வெடியை மீட்டெடுத்தனர்.

இதனைத்தொடர்ந்து ,அப்பகுதி மக்கள் கண்ணி வெடி அகற்றும் பிரிவினர் தம் வாழிடத்தைகண்ணி வெடி அற்ற பிரதேசமாக்கி தருவார்களா என எதிர்பார்க்கின்றனர் . (உ-36)

# அரச பணியாளர்களுக்காக மாவட்டம் தோறும் 1000 வீடமைப்புத் திட்டம்

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களுக்கான 'மெலரிவாகா' வீடமைப்புத் திட்டத்தில் மாவட்டங்கள் தோறும் ஆயிரம் வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

மலேசிய அரசாங்கத்தின் நிதி உதவியின் கீழ் அமைக்கப்படவுள்ள இவ்வீடமைப்புத்திட்டத்தின் முதலாம் கட்டம் அபராதுவ, தக்கணாகொட ஆகிய பிரதேசங்களில் அமுல் படுத்தப்படவுள்ளது.

இவ்வீடுகளை நடுத்தர ஊழியர்களுக்கான வீடுகள் ,சிற்றூழியர்களுக்கான வீடுகள் என இரண்டாக வகைப்படுத்தி ,நடுத்தர ஊழியர்களின் வீடுகள் 12 இலட்சம் ரூபா செலவிலும், சிற்றூழியர்களுக்கான வீடுகள் 5 இலட்சம் ரூபா செலவிலும் அமைக்கப்படவுள்ளன.

இவ்வீடுகளின் பெறுமதியை திருப்பிச் செலுத்துவதற்கு 10 தொடக்கம் 15 வருடகால எல்லை கள் வழங்கப்பட்டுள்ளன. (தி)


# சித்தர்கள் போற்றி வழிபட்ட சித்தன்கேணி சிவனின்

# பஞ்சரதபவனி சிறப்பு மலர்

# 05.07.2003

## ஆலயத்தின் வரலாறு

யாழ்ப்பாணத்தில் பழைமையும், பெருமையும் மிக்க சிவாலயங்களுள் சித்தன்கேணி தனுவோடைப் பகுதியில்



வீற்றிருக்கும் சிவாலயமும் ஒன்றாகும். இவ்வாலயம் காலம்தோறும் பல்வேறு பரிமாணங்களில் வளர்ச்சியடைந்து இந்துப் பண்பாடு மேன்மையடைய வழிசமைத்து வருகின்றது.

சிவபூஜை ஆற்றும் சித்தர்கள் வாழ்ந்த பகுதியே சித்தன்கேணி கிராமமாகும். இச்சித்தர்கள் தமது சிவ பூஜைக்காக ஸ்தாபித்து வழிபாடாற்றிய சிவலிங்கமே இவ்வாலயத்தின் ஆதிமூலவராக வீற்று அருள் பாலிக்கிறார்.

சித்தர்கள் பூரணமாக சிவபூஜையை மேற்கொள்ள இங்கு திருக்கேணி ஒன்றை அமைத்தார்கள். ஆகம விதிப்படி பிற்காலத்தில் ஆலயம் அமைக்கும்போது இத் திருக்கேணி இவ்வாலயத்தின் மூன்றாம் வீதியில் அமைந்து காணப்படுகின்றது. இக்கேணியில் இக்கிராம மக்கள் அரவங்களினால் தீண்டப்படக்கூடாது என்பதற்காக சிவலிங்கத்தின் அருளினால் சித்தர்கள் தமது சித்தினைக் கொண்டு ஒரு விஷக் கல்லை ஸ்தாபித்தார்கள். இவ்வூர் மக்கள் விஷக்கடியினால் பாதிக்கப்படாத அற்புதம் நிறைந்ததாக இவ்வாலயம் மிளிர்கின்றது. சித்தர்கள் இக்கேணியை அமைத்த மையினால் இவ்வூர் சித்தன்கேணி எனப் பெயர் பெற்று விளங்குகின்றது.

இச்சிவாலய மூலஸ்தானத்தில் இருக்கும் இலிங் கத்திற்கு ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வரர் என்ற திருநாமத் துடனும் அம்பாள் கருவறையில் சிவகாமி அம்பாள் என்ற திருப்பெயருடன் இருந்து அருள் பாலிக்கின்றார்கள்.

இட வசதியின்றி இருந்த போது 1857 இல் ஞானியார் என்ற கொடை வள்ளல் தனுவோடைப்பதி என்ற காணியையும், பல வயல் நிலங்களையும், பனந்தோட்டங்களையும் காணிக்கை யாக்கினார். மேலும் தனுவோடைப்பதியின் பிறிதொரு பகுதிக்காணியை பிரம்மஸ்ரீ சபாபதி ஐயர் பாலசுப்பையர் சிவனுக்கு இரு வீதிகள் அமைக்கவும் பரிவார மூர்த்தி கள் அமைக்கும் அவாவினாலும் காணிக்கையாக்கினார். பஞ்சபூத ஸ்தலங்கள் பாரதத்தில் காணப்படு கின்றன. இவற்றைக் கண்டு தரிசிக்கும் பேற்றினைப் பெறுகின்ற வகையில் இவ் ஆலயத்தில் வான்மீகநாதர், ஜம்புகேஸ்வரர், திருக்காளாத்தீஸ்வரர், அருணாலேஸ் வரர், சிதம்பரேஸ்வரர் ஆகிய இலிங்கங்கள் தனித்தனி சந்நிதானங்களில் இருந்து அருள் தருகின்றார்கள்.

இவ்வாலயத்தில் விக்கிரகக்கலை தனித்துவம் மிக்கது. சிவ விக்கிரகங்களான விநாயகர், பஞ்சலிங்கங்கள், சமயகுரவர் நால்வர், தட்சணாமூர்த்தி, விஷ்ணு, முருகன், சரஸ்வதி, லட்சுமி, துர்க்கை, நவக்கிரகம், சூரியன், சந்திரன், வைரவர், சண்டேஸ்வரர் என்பன இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்டு தனித்தனி ஆலயங்களாக அமைக்கப்பட்டுள்ளன. இவ்விக்கிரகங்கள் நேர்த்தியும், அழகும் கொண்டு ஆகம முறைப்படி அமைந்துள்ளன.

யாழ்ப்பாணத்தில் இருந்து மேற்காக எட்டு மைல் தொலைவில் இருக்கும் இந்த சித்தன்கேணி ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வர் தேவஸ்தானத்தில் நித்திய, நைமித்திய கிரியைகள் ஒழுங்காகவும், காலந்தவறாமலும், தனித்துவமாகவும் நடைபெற்று வருகின்றன.

நைமித்திய கிரியையில் இங்கு அதியுயர்வாக மஹோற்சவம் அமைகின்றது. ஆனி உத்தரத்தை ஈறாக வைத்து 10 தினங்கள் மஹோற்சவம் ஆற்றப்படுகின்றது. 10 தினங்களும் ஒவ்வொரு காட்சித் திருவிழாவாக நடாத்தப்படுகின்றது. இடபம், கற்பக தரு, நால்வர், அன்னம், லிங்கோற்பவம், தெப்பம், நாகலோகம், சப்பறக் காட்சிகள் கண்கொள்ளாக் காட்சிகளா கும்.

இரதோற்சவத்தில் ஐந்து இரதங்கள் மூன்றாம் திருவீதியில் வலம் வருவது குறிப்பிடத்தக்க சிறப்பாகும். ஐங்கரன், நடராஜர், சிவகாமி, சுப்பிரமணி யர், சண்டேஸ்வரர் ஆகியோர் பவனிவருவது சிந்தையை குளிரச்செய்யும் காட்சியாகும். கடைசிநாள் அதிகாலை நடராஜர் அபிஷேகம் இடம்பெறும். அத்துடன் உத்தர தரிசனமும் கிடைக்கின்றது. நடராஜப் பெருமானுக்குரிய ஆறு அபிஷேகங்களும் இவ்வாலயத்தில் நடைபெற்று வருகின்றன. மார்கழியில் 10 தினங்களும் அலங்கார உற்சவமாக நடைபெறுவதுடன் 9ஆம் நாள் பஞ்சரத பவனியும் மறுநாள் நடேச அபிஷேகத்துடன் ஆருத்திரா தரிசனமும் காண்பிக்கப்படுகிறது. மஹோற்சவ இறுதிநாள் மாலை திருவூஞ்சல் பாடப்படுகிறது. மஹோற்சவ நிறைவாக மஹா சங்காபிஷேகமும், திருக்கல்யாணமும் ஆனி பௌர்ணமி அன்று நடைபெறுகின்றன.

மேலும், சிவராத்திரி பிரதோசம் முதலான விரத அனுஷ்டானங்களும் முறைக்கமைய சிறப்புற நடைபெற்று வருகின்றன. காலத்தின் தேவைகளுக்கேற்ப சாந்தி, சமாதானம் வேண்டி 1008 தீப வழிபாடுகள் 20அடி உயர விநாயகர் பவனி, ஹோம வழிபாடுகள், மஹாயாகங்கள் அவ்வப்போது நடாத்தப்பட்டு வந்தமை சிறப்பான அம்சமாகும்.

பாமர மக்களும் ஆலய வழிபாட்டில் விருப்போடு ஈடுபடும் வகையில் தமிழ் விளக்கங்களோடு கூடிய கிரியைகள் நடாத்தப்பட்டு வருவது அனைவராலும் விரும்பப்படும் செயலாக நிகழ்வுறுகின்றது.

மாணவர்கள் மத்தியில் சமய, கிரியை அறிவூட்டும் வகையில் பண்ணிசை, ஓவியம், சமயபாடம், நடனம், பேச்சு, விநோத உடை ஆகிய தெய்வீகக் காட்சிப்போட்டி என பலதரப்பட்ட போட்டிகள் மஹோற்சவத்தினை முன்னிட்டு நடாத்தப்பட்டு, ஆனி மஹோற்சவ பஞ்சரதபவனியன்று நல்லை ஆதீன குரு முதல்வர் சுவாமிகள் கைகளால் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங் கப்படுகின்றன. இதில் மிகப்பெரும், ஆவலோடு ஆயிரக்கணக் கான மாணவர்கள் பாடசாலையூடாகவும், தனியார் கல்வி நிறுவனங்களினூடாகவும் கலந்துகொள் கிறார்கள்.

கலைகள் ஆலயத்தினூடாக வளர்ச்சியடையவேண்டும் என்பதற்காக மஹோற்சவத்தின்போது நானாவிதமாக இசைகளையும் இறைவனுக்கு சமர்ப்பிக்கப்படுவதுடன் நவராத்திரியின்போது இசை நிகழ்வுகளும் முன்னெடுக்கப்ப டுகின்றது.

தன்னை நாடிவந்து வணங்குவார் வாழ்வில் என்றும் ஒளி கொடுக்கும் சிவனின் அற்புதம் சொல்ல இயலாது. அவர் தம் கழல் தொழுது போற்றி அனைவரும் சகல செல்வயோகமிக்க வாழ்வு வாழ்வோமாக. சுபம்.

பிரம்மஸ்ரீ சபாரட்ண சர்மா உமாபதி சர்மா(B.A)

## மஹோற்சவ குருவின் அருளாசி

அமிர்த புஷ்கரணியை தீர்த்தமாகவும், வன்னியை தல விருட்சமாகவும் சித்தர்களால் பூஜிக்கப்பட்டதால் பெருமைபெறும் தலமாகவும் விளங்குவது சித்தன்கேணி தனுவோடைப்பதி ஆகும். சிதம்பரத்தில் நடராஜமூர்த்தி முதன்மைபெறுவது போன்று இப்பதியில் எழுந்தருளி அருளாட்சி புரிபவர் சிவகாமி சுந்தரியோடு விளங்கும் சிவ சிதம்பரேஸ்வரர் தொன்மைமிகு காலம் முதலாக சிதம்பரத்தில் நிகழ்வுறும் பூசை வழிபாடுகளுக்கு அமைவாக இவ்வாலயத்தின் பரம்பரை குருமார்கள் பிரம்மஸ்ரீ பாலசுப்பையர் நடராஜக் குருக்கள், ஞானபண்டித குருக்கள், காசிநாதக்குருக்கள் முதலானோர் ஆகம உற்சவ முறைகளை வழிப்படுத்தியுள்ளனர். இதனால் சிதம்பரத்திற்கு நிகரற்றதாக இங்கு ஆனி மாதம் நடராஜர் உற்சவமாகவும், மார்கழித் திருவாதிரையில் நடராஜ தரிசனமாகவும்வருடந்தோறும் இருமுறைகள் மஹோற்சவம் அமையப் பெறுகிறது. மூன்று திருவீதிகளைக் கொண்ட இவ்வாலயத்தின் சிறப்பு பஞ்சரதப் பவனியாகும். இவ் ஆனிமாத மஹோற்சவ காலத்தில் யாக தரிசனத்தில் ஒவ்வொரு தினமும் வீணாவேணு மிருதங்க கீத நிருத்த நாதஸ்வர வேத திருமுறை முதலானவை தனித்தனியாக உபயார சமர்ப்பணமாக இறைவனுக்குச் சமர்ப்பிக்கப்படுகிறது. யாழ்ப்பாணத்திலேயே சிறப்புடன் பஞ்சரத பவனி அமைவதும், அதிலே தனித்தனியே விநாயக, நடராஜ, சிவகாமி அம்பாள், வள்ளிதெய்வானை சகித சுப்பிரமணிய, சண்டேஸ்வரர் ஆகிய ஐந்து தெய்வங்களும் எழுந்தருளுவது பஞ்சகிருத்திய மஹோற்சவத்துக்கு பெருமை சேர்ப்பதாக அமைவது கண்கொள்ளாக் காட்சியாகும். இன்று நிகழ்வுறும் தெய்வீக பொழிவுபெறும் பஞ்சரத பவனியும், சிவன் அருள்காட்சியும் தரிசிப்பதற்கு தவப்பயனாக இப்பிறவி வாய்த்ததை எண்ணி அனைவரும் விழாப் பொழிவு கண்டு மண்ணில் நல்லவண்ணம் வாழ தனுவோடைப்பதி சேர்ந்து போற்றி அருள்பெறுவோமாக. சுபம்.

சித்தாண்ட பண்டிதர்
சிவஸ்ரீ கு.ஜெகதீஸ்வரக் குருக்கள்
புன்னாலைக்கட்டுவன், நல்லை ஆதீன சிவாச்சாரியார்.

## பரிபாலன சபைத்தலைவரின் வாழ்த்துச்செய்தி

எமது சித்தன்கேணி கிராமத்திற்கு பெருமை சேர்ப்பது சிவகாமி அம்பாள் கூட உடனுறைகின்ற ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வரர் ஆலயமாகும். ஆதியிலே சித்தர்களால் பூஜிக்கப்பட்ட பெருமைவாய்ந்தது இச்சிவத்தலமாகும். இச்சித்தர்கள் வழிபட்டதற்கு சான்றாக 'சித்தன்கேணி' தீர்த்தம் இவ்வாலயத்தின் 3ஆம் திருவீதியில் அமைந்துள்ளது. சித்தர்களால் ஸ்தாபிக்கப்பட்ட இக்கேணியின் பெயராலேயே இக்கிராமமும் சித்தன்கேணி என அழைக்கப்படுகின்றது. பூரண பொழிவுள்ள இராஜகோபுரத்துடன் எமது ஆலயம் மிளிர்கின்றது. சங்கானை, வட்டுக்கோட்டை, பண்டத்தரிப்பு, பண்ணாகம், சுழிபுரம், மூளாய், பொன்னாலை போன்ற கிராமங்களுக்கு தனித்துவமான சிவாலயமாக இவ்வாலயம் விளங்குகின்றது. மேற்குறிப்பிட்ட கிராம மக்கள் தங்கள் சிவ வழிபாட்டு நேர்த்திகளை இங்கே செய்வது பெருமை தருவதாகும். ஆனிமாத மஹோற்சவம், திருவெம்பாவை உற்சவம், கேதாரகௌரி விரத உற்சவங்கள் இவ்வாலயத்தின் சிறப்புமிகு உற்சவங்களாகும். ஆலய பரம்பரை குருமார்களின் வழிகாட்டலோடும், பரிபாலனசபை இவ்வாலயத்தை திறம்பட பரிபாலித்து வருகின்றது. இன்றைய தேர் புண்ணிய தினத்திலே பஞ்ச ரதங்களும் 3ஆம் வீதியில் எழுந்தருளுவதும், இவ் வீதியில் இல்லங்கள்தோறும் பந்தல்கள், பூரண கும்பங்கள் வரவேற்பு உபசாரங்கள் சித்தன்கேணியையே விழாக்கோலம் பூண வைக்கின்றது. சிவகாமி நாதராக விளங்கும் சிவ சிதம்பரேஸ்வரரை இத்தினத்தில் போற்றி பணிவதிலும் பெருமை பெறுவதுடன், விழாப் பொழிவுற பரிபாலன சபை சார்பாக வாழ்த்தி மகிழ்கின்றேன்.

நன்றி.

திரு. சோ.தெய்வேந்திரம்

விளம்பர அனுசரணை

சித்தன்கேணி

வர்த்தக நிறுவனங்களும்

பொது அமைப்புக்களும்

# உடனடி மருத்துவ சிகிச்சை அளிப்பதால் காக்கை வலியைப் போக்க முடியும்

சுகாதார அமைச்சினால் யூலை மாதம் 05ம் திகதி தேசிய காக்கை வலிப்பு தினமாகப் பிரகடனப்படுத் தப்பட்டுள்ளது. இத்தினத்தின தொனிப பொருள் 'இருளில் இருந்து வெளிச் சத்திற்கு' என்பதாகும்.

காக்கைவலிப்பு தொடர்பாக சமூகத்தில் இருக்கும் தவறான கருத்துக்களையும் மூடநம்பிக்கை களையும் களைந்தெறிவதற்காக வும், இந்நோய் சம்பந்தமான சரியான தகவல்களைத் தெளிவுபடுத்துவதற் காகவும் இந் நோய்பற்றிய விழிப் புணர்வை ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

'காக்கைவலிப்பு நோயபற்றிப் பயப்பட வேண்டியதில்லை. ஏனெனில், நாளை இந்நோய் உங்களுக்கோ அல்லது உங்கள் நண்பர், உற வினர் ஒருவருக்கோ ஏற்படலாம். இது ஒரு தொற்றுநோயல்ல. மேலும் இது ஒரு குணமாக்க முடியாத நோயுமல்ல.

எனினும் நோயைக் குண மாக்க உங்களது வழிகாட்டல், கவ னம் மற்றும் ஒத்துழைப்பு மிகவும் முக்கியம். இந்நோயைக் கட்டுப் படுத்துவதற்கான முதற்படி இந் நோயைப்பற்றி முன்னரே அறிந்து கொள்வதாகும்.

காக்கைவலிப்பு நோய்க்குக் காரணம் மூளையில் சாதாரணமாகக் காணப்படும் மின்னியல் இயக்கப் பாடு சடுதியாக அதிவேகமாகச் செயற்படுவதாகும். இது குறுகிய நேரத்திற்கே நிலைத்து நிற்கும். இவ் வேளையில் இந் நோயாளியின் சுயநினைவு அற்றுப்போய் அவரது கை, கால், நடுங்குவதை காணமுடி கிறது. இந்நோய்க்கான அறிகுறிகள் காய்ச்சல் ஏற்படும்போதோ அல்லது தலையில் காயம் ஏற்பட்ட பின்போ ஏற்படலாம். எனினும் காய்ச்சலோ, தலையில் காயமோ இல்லாத நிலையில் மேற்படி அறிகுறிகள் இரண்டு தடவைக்கு மேல்ஏற்பட் டால் இது காக்கை வலிப்பாக இருக் கலாம்.

இவ்வாறான நோயாளி உங் களுக்கு அருகிலோ அல்லது தெரிந்த வராகவோ இருக்கலாம். எவ்வாறா யினும் நீங்கள் செய்யவேண்டியது என்னவென்றால் அவரை அண்மை யில்உள்ள அரச வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் செல்வ தேயாகும்.

* உடனடியாக
* தகுந்த சிகிச்சையை

## இன்று தேசிய காக்கை வலிப்புத் தினம்

* தகுந்தமுறையில்
* நீண்ட காலத்திற்கு

பெறுவதன்மூலம் நோயைப் பூரண மாகக் கட்டுப்படுத்தமுடியும்.

நோயாளி சாதாரண வாழ்க்கை ஒன்றை வாழ வழிவகுக்கவும், அவ ரது வாழ்க்கை முறை சீர்குலையாமல் பேணி நோயை முற்றாகக் கட்டுப் படுத்தவும் முடியும். காக்கை வலிப்பு என்பது அவருடைய விதியல்ல என் பதை நிரூபிக்கமுடியும்.

**காக்கைவலிப்பின் போது பொதுவாக ஏற்படும் அறி குறிகள்:**

* மயக்கமடைந்து சில வேளைகளில் கதறியவண்ணம் கீழே விழக் கூடும்
* வாயில் இருந்து நுரை வெளியேறும்.
* பல், வாய் இறுக்கி மூடப்படும்.
* கண்கள் மேலேசெல்லும்.
* நாக்கு உதடு கடிபடும்.
* கை, கால் விறைப்படையும். பின் னும்முன்னும் வேகமாக அசையும்.
* சிலவேளைகளில் மலம், சிறுநீர் வெளியேறும்.

**கல்வி:** ஒரு சிறுவனுக்கு வலிப்பு நோய் ஏற்பட்டால் அது ஒருபோதும் அவர்களுடைய கல்விக்கு தடையாக இருக்கக்கூடாது. இது தொற்று நோயில்லாதபடியால் அந்தக்குழந்தை முன்போல் பாடசாலைக்குச்சென்று சாதாரண பிள்ளைகளைப்போல் கல்விகற்க இடமளிக்கவேண்டும். இவ்வாறான குழந்தைகளுக்கு ஆசி ரியரின் துணையும், வழிகாட்டலும் கிடைத்தால் அவர்கள் கல்வியில் உச்சநிலைகளை அடைய வாய்ப் புண்டு. அந்தப்பிள்ளையைத் தள்ளி வைக்கவோ, புறக்கணிக்கவோ கூடாது. மன்னன் 'யூலிய சீசர், பைரன்' போன்றோரும் இந்நோய் உள்ளவர்களாக இருந்துள்ளாகள்.

**தொழில்:** நோயாளிக்கு தான் விரும்பும் தொழிலை செய்ய உரிமை யுண்டு. இதற்கு வழிவகுப்பது சமூ கத்தின் கடமை. ஆபத்தை ஏற் படுத்தக்கூடிய சில தொழில்களை தவிர ஏனைய எல்லாத் தொழில் களிலும் ஈடுபடமுடியும். காக்கை வலிப்பு காரணமாக ஒருவரது அறிவு, புத்திமட்டம் என்பவற்றில் எதுவிதமாற்றமும் ஏற்படுவதில்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

**திருமணம்:** ஏனையவர்களைப் போல் காக்கைவலிப்பு நோயால் பீடிக்கப்பட்டவரும் திருமணம் செய்து கொள்ளலாம். ஆனால் நோயாளியை திருமணம் செய்பவர் அவரது உண்மை நிலையைப் பற்றி நன்கு அறிந்திருக்கவேண்டும். இந் நோயால் தாம்பத்திய உறவில் எவ்வித பாதிப் பும் ஏற்படுவதில்லை.

**குழந்தை:** வலிப்பு நோயினால் பாதிக்கப்பட்டுள்ள தாய்க்குப்பிறக் கும் குழந்தை இந் நோய்காரணமாக அங்கக் குறைபாடுகளுடன் பிறப்ப தில்லை.

**முதலுதவி:** காக்கைவலிப்பு நோய் ஏற்பட்டுள்ள ஒருவரைக்கண்டால் உடனடியாக...

* நோயை இனங்கண்டு கொள் ளுங்கள்.
* நோயாளியை ஒருபக்கம் சரித்துப் படுக்கவைக்கவும். இவ்வாறு செய்வ தன் மூலம் சளி வாந்தி போன்றவற் றால் சுவாசக் குழாய் அடைபட்டு உயிராபத்து ஏற்படுவதை தவிர்க்க லாம்.
* கரண்டியை வாயில்போடவோ எதை யும் பருக்கவோ எவருக்கும் இடம ளிக்க வேண்டாம்.
* இரும்புப் பொருட்களை நோயாளி யின் கையில் கொடுப்பதால் வலிப் பைக் கட்டுப்படுத்த முடியாது. இது ஒரு மூடநம்பிக்கை.
* சில நிமிடங்களுக்கு வலிப்பு நிற்காவிட்டால் அருகிலுள்ள அரச வைத்தியசாலைக்கு நோயாளியை விரைவாக அழைத்துச் செல்லவும்.
* நோயாளி சிபார்சு செய்யப்பட்ட மருந்துகளைச் சரியானமுறையில் எடுக்கிறாரா எனப் பார்க்கவும். அவ நோயைப்பற்றி வெட்கப்பட்டால் அதனைப் போக்கவும்.
* நோயாளி சாதாரணமாக வாழ்க் கையை வாழ உதவிசெய்யவும்.
* தொடர்ந்தும் அவர்மேல் அக்கறை செலுத்தவும்.

சரியானமுறையில் தகுந்த நேரத்தில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்தால் வலிப்புக்கு எமது வாழ்க் கையை பறிகொடுக்கத் தேவை யில்லை.

**காக்கைவலிப்பு நோயாளிக்கு**
**- மூடநம்பிக்கை பலனில்லை.**
**காக்கைவலிப்பு நோயாளி**
**- மனநோயாளியுமல்ல.**
**காக்கைவலிப்பு நோயை முற்றாக**
**- கட்டுப்படுத்த முடியும்.**
**எனவே நாம் கைகோர்த்துக்**
**- கொள்வோம்.**

## பல்கலைஅணிக்கு சம்பியன்கிண்ணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சென்றலைட்ஸ் விளை யாட்டுக்கழகத்தின் அனுசரணை யுடன் யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட் டச் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வந்த விபுலானந்தன் ஞாபகார்த்த கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ்.பல்கலைக்கழகஅணி சம்பியன் கிண்ணத்தை வென்றுள்ளது.

கடந்த புதன்கிழமை யாழ். வேம்படி மகளிர் கல்லூரி கூடைப் பந்தாட்ட ஆடுகளத்தில் நடை பெற்ற இவ் இறுதியாட்டத்தில் யாழ்.பல் கலைக் கழக அணியை எதிர்த்து விளையாடிய ஜொலிஸ்ரார் விளை யாட்டுக் கழகஅணியை 86:52 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று பல்கலைக்கழக அணி சம்பியனாகி யது. (உ-68)

## திரியாயில் ஜி.ரி.சந்.நிறுவனம் வீடமைப்பு

(கொழும்பு)

திருகோணமலை திரியாய் கிராமத்தில் மீள் குடியேறிவரும் மக்களுக்கு ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் 150வீடுகளை அமைத் துக் கொடுக்கவுள்ளது.

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் அனுசரணையுடன் ஒவ் வொருவீடும் ஒருலட்சம் ரூபா செலவில் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளது.

இதேவேளை, தமிழ[illegible] புனர் வாழ்வுக் கழகமும் இப்பகுதியில் 10வீடுகளை அமை[illegible] வருகிறது. (தி)

## விசாரணை

(கொழும்பு)

உடத்தலவின்ன படுகொலை தொடர்பான வழக்கு விசாரணை கொழும்பு மேல்நீதிமன்றில் நேற்று முன்தினம்நடைபெற்றபோது,

உயிரிழந்த 10முஸ்லிம் இளைஞர்களினதும் தங்க ஆபர ணங்கள், நீதிமன்றில் தடயப்பொருள் களாக குற்றப்புலனாய்வுப் பிரிவின ரால் சமர்ப்பிக்கப்பட்டது. (த)

## டி.என்.ஏ.மரபணு சோதனைக்கூடம் அமைப்பதில்
# பாதுகாப்பு அமைச்சு பாராமுகம்
# வெளிநாடுகளின் உதவி நாடுகை

(கொழும்பு)

கொழும்பில் டி.என்.ஏ.மரபணு சோதனைக்கூடம் ஒன்றினை அமைப் பதற்கான நடவடிக்கைகளில் ஈடு பட்டுவரும் கொழும்பு பல்கலைக் கழக சட்ட மருத்துவபீடம், இதற்காக வெளிநாடுகளின் உதவியை நாடி யுள்ளது.

நாட்டில் அதிகரித்துவரும் குற்றச செயல்களைக் கட்டுப்படுத்தவும் குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்களை சந்தேகத்திற்கு இடமின்றி நீதிமன் றத்தில் உறுதிசெய்யவும் வேண்டி நிறுவப்படவுள்ள இந்த மரபணுச் சோதனைக்கூட அமைப்புக்கு 20மில் லியன் ரூபா தேவை யென்பதை சட்டமருத்துவபீடம் ஏற்கனவே பாது காப்பு அமைச்சுக்கு தெரியப்படுத் தியிருந்த போதிலும் இது விடயத் தில் கவனம் செலுத்தப்படாததை யடுத்தே வெளிநாடுகளின் உதவி கோரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படு கிறது.

இலங்கையில் வருடமொன்றுக்கு சுமார் ஆயிரத்து 300பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் நடைபெறு கின்ற போதிலும் போதிய சாட்சியங் கள் இல்லாத காரணத்தினால் குற்ற வாளிகள் தண்டனையில் இருந்து தப்பிவிடுகின்றனர்.

ஆனால், பாலியல் வல்லுறவில் சம்பந்தப்பட்டவர்களை மரபணுப் பரிசோதனை மூலம் உறுதியாக அடையாளப்படுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

# அமைச்சர் தொண்டமானின் உறவினர் கொலையிலும் தம்மிக்கவுக்கு தொடர்பு

(கொழும்பு)

கொழும்பு மாஜிஸ்ரேட் நீதி மன்றத்தில் கடந்தவாரம் சரண டைந்த உஸ்லியனகே தம்மிக்க பெரேரா அல்லது தம்மிக்க அமர சிங்க என்பவர் அமைச்சர் ஆறு முகம் தொண்டமானின் நெருங்கிய உறவினரான நிறஞ்சன் செல்லசாமி என்பவரின் படுகொலையிலும் சம் பந்தப்பட்டிருந்துள்ளார் என பொலி ஸார் சந்தேகம் கொண்டுள்ளனர்.

மக்கள் ஐக்கியமுன்னணி அர சின் இறுதிக்காலகட்டத்தில் செல்ல சாமி கொள்ளுப்பிட்டி பொலிஸ் பகுதியில் படுகொலை செய்யப்பட் டிருந்தார்.

கொள்ளுப்பிட்டி படுகொலை யில் இவர் சம்பந்தப்பட்டிருந்துள் ளார் என்பதற்கு தங்களிடம் மறுக்க முடியாத சாட்சியங்கள் இருக்கின்றன என பொலிஸ் மத்தியநிலய புல னாய்வுப்பிரிவு சிரேஷ்டபொலிஸ் சுப்பி ரண்டன் மஹிந்தஹெட்டி ஆராய்ச்சி கூறியிருக்கின்றார்.

நிலத்தகராறு ஒன்றின் காரண மாகக் கொலைசெய்யப்பட்ட நிரஞ் சனுக்கு ஆதரவாக இருந்தவர் களை சேனக்க, சனாஆகியவர் களின் கொலைகளிலும் இவர் சம் பந்தப்பட்டிருந்துள்ளார் என்று திரு ஹெட்டிய ஆராய்ச்சி தெரிவித்துள் ளார்.

செல்லசாமியும் அமரசிங்காவும் ஒரேகாணியை விலைக்கு வாங்கு வதற்கு முன்வந்திருந்தார்கள் என் றும் அதனாலேயே இவர்களுக் கிடையில் தகராறு ஏற்பட்டிருக் கிறது என்றும் பொலிஸார் கருது கின்றனர்.

சேனக்கவும், சனாவும் பாதாள உலகக்கும்பலைச்சேர்ந்தவர்கள் என்றும் தெரியவந்துள்ளது. (பி)

# பதுளை மாவட்ட பா.உக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு

(பதுளை)

பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எச்.ஏ.ஆர் மத்து பண் டாரவுக்கு எதிராக பதுளை பொலிஸ் நிலைய விஷேட குற்றத்தடுப்புப்பிரி வில் முறைப்பாடு செய்யப்பட்டுள் ளது.

6 இலட்சம் ரூபா பெறுமதியான உருளைக்கிழங்கு விதைகளை கட னாகப்பெற்ற பாராளுமன்ற உறுப் பினர், அதனை மீளச்செலுத்த தவறிவிட்டதாக குற்றம்சாட்டப்பட்டே முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவர் ஊவாமாகாண விவசாய அமைசசு ஊடாக இவ் விதை கிழங்குகளை கொள்வனவு செய் துள்ளார்.

ஊவாமாகாண கல்விஅமைச்சு கொள்வனவுசெய்த விதை உருளைக் கிழங்குகளை விற்பனைசெய்ய முடியாதுபோனதால் அவற்றை கடன் அடிப்படையில் விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட் டது. இதன்மூலம் மாகாணசபைக்கு 6கோடியே 50 இலட்சம்ரூபா கிடைக்க வேண்டும். கடன்தொகையை செலுத்தி வேண்டியவர்களில் அமைச்சர் ஒருவரும் அடங்குவர். (தி)

# சமாதான முயற்சிகள் பற்றிய அமைச்சர்களின் விளக்கம்

## பிரதமர் ரணில் கோரியுள்ளார்

(கொழும்பு)

தற்பொழுது முன்னெடுத் துச்செல்லப்படும் சமாதானமுயற் சிகள் தொடர்பாகப் போதியவிளக் கத்தை தமது அமைச்சர்களிட மிருந்து பெறவும், அதுதொடர்பான விளக்கத்தை அவர்களுக்கு அளிக்க வும் ரணில்விக்கிரமசிங்க தீர்மானித் துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின் றது.

சமாதான முயற்சிதொடர்பாக அமைச்சர்களின் கருத்துக்களை தனித் தனியாக சமர்ப்பிக்குமாறு பிரதமர் அமைச்சர்களுக்கு பணித்துள்ளார். நேற்றுமுன்தினம் நடைபெற்அமைச் சரவைக் கூட்டத்திற்கு முன்னரான சந்திப்பில்பிரதமர் இக்கோரிகையை முன்வைத்துள்ளார். (பி-5)

# பிரபல சதுரங்க வீரர் யாழ்ப்பாணம் வருகிறார்

(யாழ்ப்பாணம்)

பிரபல சதுரங்க வீரரும், சென்னை சதுரங்கச் சம்மேளனத்தின் உப தலைவரும், இன்ரநஷனல் மாஸ் ரரும் ஆகிய மனுவல் அறோன் எதிர்வரும் வாரமளவில் 2நாட்கள் விஜயமொன்றினை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

இவர் இங்கிருக்கும் காலப்பகு தியில் யாழ்ப்பாணத்திலும், தென்ம ராட்சியிலும் சதுரங்கப்பயிற்சி முகாம்களை நடாத்தவுள்ளார்.

இதற்கான ஏற்பாடுகளை யாழ்ப் பாணம் சதுரங்கச் சம்மேளனத் தினர் செய்துவருகின்றனர். சதுரங்க ஆர்வலர்கள் இப் பயிற்சிமுகாமில் கலந்துகொண்டு பயனடையுமாறு கேட்கப்படுகின்றனர்.

முன்னாள் உலகச் சம்பியன் விஸ்வநாத் ஆனந்தினுடைய முன் னாள் பயிற்சியாளர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

# ஆயுதக் களஞ்சிய தீவிபத்து விசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)

அனுராதபுரம் காளியபுரம் இராணுவ முகாம் ஆயுதக் களஞ்சியத்தில் ஏற்பட்ட தீவிபத்துக் குறித்து தீவிர விசாரணைகள் ஆரம்பிக்கப்பட் டுள்ளன.

இராணுவத்தளபதி லெப்டினன் ஜெனரல லயனல் பலகல்ல, இச்சம் பவம் தொடர்பான விசாரணைகளை நடத்த இராணுவத் தலைமை யகத்தைச்சேர்ந்த 3 அதிகாரிகள் கொணட குழுவொன்றை அவ்விடத் துக்கு அனுப்பிவைத்துள்ளார்.

ஆர்.பி.ஜி.குண்டுகள், றொக்கெட் வகைகள, கைக்குண்டுகள், பெருமளவு தோட்டாக்கள், கிளைமோர்வகைகள் என்பன அவ் ஆயுதக் களஞ்சியத் தில் எரிந்து நாசமாகியுள்ளன.

வடபகுதியில்உள்ள இராணு வத்தினருக்குத் தேவையான ஆயு தங்கள் இக்களஞ்சியத்தில் இருந்தே விநியோகிக்கப்பட்டுவருகிறது.

இந்த முகாமில் முன்பு இரு தடவையும் ஆறு விபத்து ஏற்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது. (தி)

# மண் மீட்புக்காக தம் உயிரை ஆயுதமாக்கியவர்கள் கரும்புலிகள்

அந்நிய ஆதிக்கச் சக்திகளின் அடக்குமுறைகளைக் களைந்தெறியக் கரும்புலிகளாய் அவதாரமெ




டுத்த உத்தம வீரர்களின் நினைவு தினம் இன்றாகும்.

தமிழினத்தின் தாயகம் காக்க கரும்புலிகளாகவும், கடற்புலிகளாகவும் வீறு கொண்டெழுந்து உயிர் நீத்த மாந்தர் தம் மாண்பை நினைவு கூரும் நன்றியுணர்வு எம்மிடையே கிளர்ந்தெழ வேண்டிய தினம் யூலை 5.

விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாற்றில் உந்து சக்தியாகவும் அசைக்க முடியாத மனித ஆயுதமாகவும் இருப்பவர்கள் கரும்புலிகள். இன்று நடைபெற்றுக்கொண்டிருக்கும் சமாதான பேச்சுவார்த்தையின் காரணகர்த்தாக்களே இந்தக் கரும்புலிகளாகும்.

தமிழர் மீதான அடக்கு முறையைக் கட்டவிழ்த்து விட்டு ஆக்கிரமிப்பில் ஈடுபட்டிருந்த சிங்கள இராணுவத்தினருக்கு சிம்ம சொப்பனமாகி ஆள்பலத்தாலோ ஆயுத பலத்தாலோ தமிழர்களை அடக்க முடியாது என்றுணர வைத்தவர்கள் இந்தக் கரும்புலிகள்.

இவர்களில் ஆண் கரும்புலிகள் 177 பேரும் பெண்கரும்புலிகள் 64 பேரும் அடங்குவர். இதேவேளை, படையணி ரீதியாகப் பார்க்கும் போது தரைக் கரும்புலிகளாக 78 பேர் வீரச்சாவடைந்துள்ளனர். இவர்களில் 60 ஆண் போராளிகளும் 18 பெண் போராளிகளும் அடங்குவர். கடற்கரும்புலிகளில் 163 பேர் வீரச்சாவடைந்துள்ளனர். இவர்களில் 117 ஆண் போராளிகளும் 46 பெண் போராளிகளும் அடங்குவர்.

வீரச்சாவடைந்த கரும்புலிப் போராளிகளை மாவட்ட ரீதியாகப் பார்க்கும்போது யாழ். மாவட்டம் 125 பேர், மட்டக்களப்பு அம்பாறை மாவட்டம் 47 பேர், வன்னி மாவட்டம் 22 பேர், திருகோணமலை மாவட்டம் 16 பேர், மன்னார் மாவட்டம் 15 பேர், முல்லைத்தீவு மாவட்டம் 10 பேர், ஏனைய மாவட்டங்கள் 6 பேர் எனத் தம்மை அர்ப்பணித்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் மனித வெடிகுண்டாகத் தன்னை ஆகுதியாக்கிக்கொண்ட முதலாவது கரும்புலி கப்டன் மில்லர் என்று அழைக்கப்படும் வல்லிபுரம் வசந்தன் என்ற வீர மறவனாவார்.

துன்னாலை கரவெட்டியைத் தனது பிறந்த மண்ணாகக் கொண்டவர் முதற் கரும்புலி கப்டன் மில்லர்.

1987ஆம் ஆண்டு அப்போதைய ஐக்கிய தேசியகட்சி அரசியல் தேசிய பந்தோபஸ்து அமைச்சராக இருந்த லலித் அத்துலத் முதலியினால் வடமராட்சிப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட 'ஒப்பரேசன் லிபரேசன்' இராணுவ நடவடிக்கையின்போது வடமராட்சிப் பகுதி இராணுவத்தினரின் பிடியில் சிக்கியது. இதன்போது தமது உடைமைகளை இழந்து உயிரைக் காப்பாற்றிக்கொள்வதற்காக மக்கள் வல்வெட்டித்துறை ஆதி கோயிலடியில் தஞ்சம் புகுந்தனர்.

இவ்வாறு தஞ்சம் புகுந்த மக்களை வான் குண்டுகளால் கொன்றழித்தும் பெற்றோர், உறவினர் முன்னிலையில் பல இளைஞர்களைக் கைது செய்து கொன்று குவித்தமையும் சகிக்க முடியாது. கிளர்ந்தெழுந்தான் கரும்புலி மில்லர்.

## இன்று கரும்புலிகள் நாள்

ஒப்பரேசன் லிபறேசன் மூலம் வடமராட்சியைக் கைப்பற்றிவிட்டோம் என்ற வெற்றிக் களிப்பில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் ஒரு பட்டாலியன் (ஆயிரம்) இராணுவத்துடன் பாரிய முகாம் ஒன்றை சிறீலங்கா இராணுவம் அமைத்திருந்தது.

யாரும் எண்ணியிராத வகை'யில் வடமராட்சிப் பகுதியில் பல இளைஞர்களைக் கொன்றழித்த இராணுவத்தைக் கதி கலங்க வைத்து, 1987 யூலை 5ஆம் திகதி வெடி மருந்து வாகனத்துடன் சென்று நெல்லியடி இராணுவ முகாமைத் தாக்கினான். இதில் 120ற்கும் மேற்பட்ட படையினர் பலியாகினர். நூற்றுக்கணக்கான படையினர் காயங்களுடன் புறமுதுகிட்டோடினர். படையினரைக் கலங்கவைத்த முதற் கரும்புலி கப்டன் மில்லரின் 16வது நினைவுதினம் இன்றாகும்.

இதேவேளை, விடுதலைப் புலிகளின் மகளிர் படையணியில் முதற் கடற்கரும்புலியாக கப்டன் அங்கயற்கண்ணி (துரைசிங்கம் புஷ்பகலா- மண்கும்பான் யாழ்ப்பாணம்) உருவெடுத்தார். அங்கயற்கண்ணியின் தாக்குதல் காங்கேசன்துறைக் கடற்பரப்பில் 16ஆம் திகதி ஆகஸ்ட் மாதம் 1994ஆம் ஆண்டே நடத்தப்பட்டது.

தான் ஒரு கரும்புலியாக விரும்புவதை அங்கயற்கண்ணி பிரபாகரனுக்கு தெரியப்படுத்தினார். கரும்புலியாவதற்கு சில விசேட தகைமைகள் வேண்டும். அனைத்தும் அங்கயற்கண்ணியிடம் இருந்தன.

17 கடல்மைல்களை (ஏறத்தாழ 35 கிலோமீற்றர்) சரியாக 8 மணித்தியாலமும் 27 நிமிஷங்களிலும் நீந்திக் கடந்தவள் அங்கயற்கண்ணி. கடற் கரும்புலிகளுக்குரிய பயிற்சிகளில் ஈடுபடத் தொடங்கிய நாளில் இருந்து அவளது திறமைகள் தளபதிகளைத் திருப்தியடைய வைத்தன. கொடுக்கப்படும் இலக்கை வெற்றிகரமாக தாக்குவாள் என்பதில் எவருக்கும் ஐயமிருக்கவில்லை.

இதேபோல் காங்கேசன்துறை துறைமுகத்தில் 45 அடி ஆழம் கொண்ட நீர்ப்பரப்பில் நிலைகொண்டிருந்த கட்டளைத் தலைமையகக் கப்பலை யாராலுமே தாக்க முடியாது என்பதில் எந்தக் கடற்படை அதிகாரிக்குமே சந்தேகம் இருக்கவில்லை.

6300 தொன் எடையைக் கொள்ளக்கூடியதும் 326.04 அடி நீளமும் 51.02 அடி அகலமும் அதி சக்தி வாய்ந்த ராடர்கள் பொருத்தப்பட்டதுமான நீரில் மிதக்கும் நடமாடும் தலைமையகக் கடற்படைக் கப்பலை ஒரு தனி மனிதனால் அழிக்க முடியும் என்று அவர்கள் கனவிலும் நினைக்கவில்லை.

கரும்புலிப் பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் போது அங்கயற்கண்ணி தனது சக போராளிகளிடம் ''நான் நல்லூர் திருவிழா நடக்கும் போது தான் சாக வேண்டும். அப்பதான் திருவிழாவில் அம்மா கச்சான் வித்து வந்த காசிருக்கும். அந்தக் காசிருந்தாத்தான் என்ர நினைவு நாளுக்கு வீட்டை போற போராளிகளுக்கு அம்மாவால் சாப்பாடு கொடுக்க முடியும்'' என்று அடிக்கடி கூறுவாளாம்.

அங்கயற்கண்ணியின் தாக்குதல் இலக்கு நேரம் குறிக்கப்பட்டு திட்டம் தயாரானது. அங்கயற்கண்ணியை கடற்கரை வரை வந்து சிலர் வழியனுப்ப அதன் பின்னரும் விடாது சில போராளிகளும் அவளுடனேயே நீந்தி ஒரு குறிப்பிட்ட தூரம் வரை வந்து வழியனுப்ப, அதன் பின்னரும் இலக்கிலிருந்து ஒரு குறிப்பிட்ட தூரம்வரை வந்து சக போராளிகள் இறுதி விடை கொடுத்தனர். ''எனது இலக்கை அடையாமல் நான் திரும்ப



மாட்டேன்'' அங்கயற்கண்ணி சொன்ன இறுதி வாக்கியம் இது தான்.

விடை பெற்ற அங்கயற்கண்ணியின் அசைவுகள் தூரத்தே தெரியும் வரையும் அதன் பின்னரும் கண்கள் வலிக்க பார்த்துக் கொண்டு இருந்துவிட்டு போராளிகள் திரும்பினர்.

1994-08-16 அதிகாலை 12.35 மணிவரையில் காத்துக் கொண்டிருந்த போராளிகளின் செவிப்பறை அதிர்ந்தது. காங்கேசன்துறை துறைமுகத்தில் நின்ற கட்டளைக்கப்பல் தகர்ந்தது.

மகளிர் படையில் முதற் கடற் கரும்புலியான கப்டன் அங்கயற்கண்ணியின் வழிகாட்டலில் இன்று ஆயிரக்கணக்கான அங்கயற்கண்ணிகள் தங்களுக்கு ஓர் சந்தர்ப்பம் கிடைக்காதா என காத்துக்கிடக்கின்றனர்.

தமிழர்கள் எவரும் சாவுக்குப் பயந்தவர்கள் அல்ல என்பதை உலகமே உணர்ந்து வியக்கும் வண்ணம் உயிரை நீத்த கரும்புலிகளின் நினைவுதினம் இன்று தமிழர் தாயகம் எங்கும் உணர்ச்சி பூர்வமாக அனுஷ்டிக்கப்படுகின்றது.

இன்றைய நாளில் தியாகம் மிகு கரும்புலிகளை ஒவ்வொரு தமிழ் மகனும் சிந்தையிலிருத்துவது கடமையாகும்.

-தமிழன்

---

### நிலையான பதிவுகள் நினைவுகள்...

உயிர்த் தீபத்தைக் கையில் ஏந்தி
காடு மேடெலாம் மானுடம் ஓட
கந்தகம் தோள் தழுவ உடல்வெடித்து
உயிர் உறைவதை உணர்ந்த போதும்
சிரித்த முகத்துடன் கையசைத்துச் சென்ற
சின்னக் குயில்களே!

T.ஜசிதா

### இறுதி மடலாய்...

அன்புள்ள அம்மாவுக்கு...
ஊருக்குப் போகவென ஓடிப்போனாய்
போகமுடிந்ததா உன்னால்...?
செவிப்பறை அதிர...
இன்றிரவு அழைப்பு வரும்
ஆயத்தமாகு...!
கவனம்...
வீட்டு முற்றத்தில்
தசைத் துண்டங்கள்
எதிரி மட்டுமல்ல...
.................... -விடுதலை

### விடியலைத் தேடிய வெண்புறாக்கள்

ஓ... மாவீரனே
பிறப்பு முதல் இறப்புவரை...
முயற்சி முதல் முடிவு வரை...
நீங்கள் கண்ட கனவுகளோ பல...
காவியம் என்னும் சொல்லுக்கு வித்திட்ட
காவிய நாயகன் பரம்பரையில் உருவாகிய
மாவீரர்களே...
விடியலுக்காய் மடிந்த வெண்புறாக்களே
உங்கள் காவியங்களை இனிவரும்
சமுதாயம் நிச்சயமாய் பாடத்தான் போகிறது

-வி.அகில்

### உலகத்தில் ஒளியாக ஆகிடுவீர்

பாரிலே தமிழினம் பட்டதுயர் கண்டு - தம்
பாசத்தை தேசத்தில் நிலையாக்கினரே
வீரமே விளையாக வெந்தணல் விழிகொண்டு
வேங்கையாக மண்ணில் மலர்ந்தனரே

உயர்வான எம்மண்ணில் உயிர்பெற்று - என்றும்
உடையாத கோட்டைகள் அழித்தனரே
முடியெனச் சொன்ன கயவரை வென்று
வெடியெனக் கடலில் வெடித்தனரே

-ஆழியூர் சீ.ஏ.யசீகரன.

### தமிழ் விடுதலை

பொங்கி எழுந்திட்ட தமிழா - உன்கதை
போர்க்களம் நின்று சொல்லுதடா - நீ
சிந்திய செங்குருதியெல்லாம் - ஒரு
தேசத்தின் நீரூற்றாய் ஓடுதடா

-மு.சுகந்தினி

### மரணத்தை வென்ற மறவர்கள்

இவர்கள்
மண் மீட்பிற்காக
தம்மையே கொடுத்தவர்கள்
தமது மரணத்திற்கு
தாமே சாவுமணி அடித்தவர்கள்
இந்த வருடம் இந்த மாதம்
இந்தத் தேதி இந்த நேரம்
எனை அழைக்க வாடா என்று
காலனுக்கே கட்டளையிடுபவர்கள்
அதனால் இவர்கள்,
மரணத்தையே வென்றவர்கள்.

-புதுக்கவி

கனவிலும் இல்லாது மன்னோ வினைவேறு
சொல்வேறுபட்டார் தொடர்பு - குறள்

# வலம்புரி

## புதிய படைமுகாம் எதற்காக?

சமாதான முயற்சிகள் மீண்டும் ஆரம்பிக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் அரசு-புலிகள் தரப்பில் தயாராகி வரும் வேளையில் புதிய படைமுகாம்களை அமைப்பதில் படையினர் ஈடுபட்டுவருவது மக்களைக் குழப்பமடையச் செய்திருக்கிறது.

சமாதானப் பேச்சுக்கள் என்பது அரசுக்கும் புலிகளிற்கும் இடையில் நடைபெற்று முடிவுகள் எட்டப்படுவது மட்டுமன்றி சமாதானச் சூழ்நிலைகளுக்கான அறிகுறிகளும், அதற்கான களநிலைமைகளும் உருவாக்கப்பட வேண்டும் குறிப்பாக அரசிற்கும் புலிகளிற்கும் இடையே சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமான உடனேயே தென்னிலங்கை சிங்கள மக்கள் யாழ்பாணத்திற்கு வருகைதரத்தொடங்கினர். அதேபோல் வடபகுதி மக்கள் கடந்தகால அச்சங்களின்றி தென்னிலங்கைக்குச் சென்று வந்தனர். இத்தகைய நிகழ்வுகள் சமாதானத்தின் அறிகுறியாக இருந்ததுடன், தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்ற மன உணர்வை சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படுத்தியது.

அதேவேளை, வடபகுதிக்கு விஜயம் செய்தமையால் சிங்கள மக்கள் பற்றிய நல்லுணர்வு தமிழர்களிடையே ஏற்பட்டது. இது சமாதானத்தை வலிமைப்படுத்துவதாக அமைந்திருந்தது.

ஆனால் இத்தகைய சமாதானச் சூழ்நிலையைச் சிதைக்கும் வகையில் படையினர் புதிய படைமுகாம் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இதனால் மக்கள் மத்தியில் மீண்டும் யுத்த பயம் ஏற்பட்டுள்ளதுடன் இலங்கை இனப்பிரச்சினை ஒருபோதும் தீர்ப்போவதில்லை,

தமிழர்களுக்கு அரசு எந்த உரிமையையும் வழங்காது, சமாதானப் பேச்சுக்கள் எல்லாம் வெறும் சுத்துமாத்து என்ற உணர்நிலைக்கு மக்களை தள்ளியுள்ளது. இதனால் முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகளில் தமிழ்மக்கள் ஆர்வமற்றவர்களாக இருப்பதுடன், சமாதானப் பேச்சுக்கள் என்பது யாருக்காகவோ நடத்தப்படுகின்ற விடயமாகவுமே கருதிக்கொள்ளப்படுகிறது.

ஒருபுறம் சமாதானம், மறுபுறம் யுத்த ஆயத்தம் என்பது யுத்தத்திற்கு சாதகமாக இருக்குமேதவிர அது சமாதானத்திற்குச் சாதகமாக ஒருபோதும் அமையாது. யுத்த சூழ்நிலையோ, அன்றி யுத்த ஆயத்தங்களோ சமாதானமாக மாட்டாது என்பதை அரசு புரிந்துகொள்ளுமாயின் புதிய படைமுகாம் அமைக்கும் முயற்சிகளில் இராணுவம் ஈடுபடுவதைத் தடுத்து நிறுத்துவது அவசியமாகும்.

மாறாக படைமுகாம் அமைப்பு ...புறம், சமாதான முயற்சி ...புறம் என்ற நிலையில் ...வடிக்கைகள் நகர்த்தப்ப...ின் அது சமாதானத்திற் ... யுத்தம் என்ற ஜனாதிபதி ... இடத்திற்கே கொண்டு ...ெல்லும்.

வடக்குக் கிழக்கு இடைக்கால நிர்வாகத்தில்

# தமிழ் மக்களுக்குள்ள உரிமைகள் அனைத்தும் முஸ்லிம்களுக்கும் வழங்கப்பட வேண்டும்

(யாழ்ப்பாணம்)

இடைக்கால நிர்வாகம் அமைக்கப்படும்போது தமிழ் மக்கள் பெறும் அதே உரிமைகளும் அதிகாரங்களும் முஸ்லிம் மக்களும் பெறுவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். தமிழ் மக்களுக்கு வழங்கும் அதே பத்திரத்திலேயே முஸ்லிம்களின் உரிமைகளும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று கிழக்கு மாகாண ஜம்இய்யத்துல்உலமா சபை தனது கோரிக்கையை மீண்டும் வலியுறுத்தி உள்ளது.

இது விடயம் தொடர்பாக கிழக்கு மாகான ஜம்இய்யத்துல்உலமா சபையின் சார்பில் அதன் தலைவர் மௌலவி எஸ்.எச்.ஆதம்பாவா, செயலாளர் மௌலவி ஏ.அபூ. உபைதா ஆகியோர் இணைந்து அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளனர்.

அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

இலங்கை அரசு சமாதானத்தை நோக்கி வைக்கும் ஒவ்வொரு அடியையும் நாம் வரவேற்கின்றோம்.

இச் சமாதானத்தின் மூலம் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் முஸ்லிம் சமூகம் நிம்மதியாகவும், தலை நிமிர்ந்தும் வாழும் நிலை உருவாகவேண்டும்.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை சகல இனங்களும் நிம்மதியாக வாழ்வதாயின் தங்களைத் தாங்களே நிர்வகிக்கும வழிமுறை வகுக்கப்பட வேண்டும்.

ஓர் இனத்தை மற்றோர் இனம் ஆளும் நிலை உண்மையான சமாதானத்தை ஏற்படுத்தாது.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் தமிழ் மக்களைப் போன்று ஏறத்தாழ சமமான தொகையில் வாழ்வதையும் கிழக்கில் உள்ள 3மாவட்டங்களில் இரண்டில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்வதையும் கருத்தில கொண்டு இடைக்கால நிர்வாக ஒழுங்கு மேற்கொள்ளப்படவேண்டும்.

இடைக்கால நிர்வாகத்தில் கிழக்கு முஸ்லிம்களிற்கு சம உரிமை பெற்றுத்தரவேண்டிய பொறுப்பு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசிற்கு உள்ளது என்பதையும் இப்பொறுப்பில் இருந்து அதன் 12 பாராளுமன்ற உறுப்பினர்களும் விடுபட முடியாது என்பதை சுட்டிக்காட்டுகிறோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-15)

# சூழல் வாரக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

மூளாயில் உள்ள சிறுவர் கல்விக்கும் பால் நிலை அபிவிருத்திக்குமான நிறுவனத்தின் ஏற்பாட்டில் 6,12,13,19ம் திகதிகளில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5மணி வரை உலக சூழல் வாரம் சார்ந்த மாபெரும் கண்காட்சி நிகழ்வு ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது.

நாளை 6ம் திகதி ஞாயிற்றுக் கிழமை யாழ். சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயத்திலும், எதிர்வரும் 12ம் திகதி சனிக்கிழமை யாழ். சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிலும் 13ம் திகதி ஞாயிற்றுக் கிழமை யாழ். வட்டு மத்திய கல்லூரியிலும் 19ம் திகதி சனிக்கிழமை யாழ். அராலி இந்துக் கல்லூரியிலும் இக் கண்காட்சி இடம்பெறவுள்ளது. (உ-15)

# கேணல் ராஜ் நினைவு மண்டபம் திறந்து வைப்பு

(கிளிநொச்சி)

மாவீரர் கேணல் ராஜுவின் நினைவு மண்டபம் நேற்று முன்தினம் வன்னியில் திறந்து வைக்கப்பட்டது.

கடந்த வருடம் நோய்வாய்ப்பட்டுச் சாவைத் தழுவிய கேணல் ராஜுவின் ஓராண்டுப் பூர்த்தியை முன்னிட்டு வடபோர் முனைக் கட்டளைப் பணியகத்தின் போராளிகளின் பாசறையிலேயே இந்த நினைவு மண்டபம் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வில் பொதுச் சுடரை மேற்குக் கட்டளைப் பணியகத் தளபதி கேணல் ஜெயந்த் ஏற்றி வைக்க, நினைவு மண்டப நாடாவை கேணல ராஜுவின் துணைவியாரான போராளி கங்கா திறந்துவைத்தார். ராஜுவின் உருவப்படத்திற்கு கிட்டு பீரங்கிப் படையணித் தளபதி பானுவும், சிறுத்தைப் படையணியைச் சேர்ந்த வசந்தாவும் நினைவுச்சுடரேற்றினர். கேணல் ராஜுவின் சகோதரி போராளி கோமதி உருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்தார். (உ-8)

# கொமிசியக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

புனித - மரியாயின் சேனையின் மாதாந்த கொமிசியக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ் மறைக்கல்வி நடுநிலைய ஒன்று கூடல் மண்டபத் தில் செல்வி வயலற் இம்மானுவேல தலைமையில்நடைபெறவுள்ளது. (உ)

# திருவிழா நிறைவு

(யாழ்ப்பாண[illegible])

யாழ். கச்சேரி [illegible]லூர் வீதி புனித ஆசீர்வாதப்பர் ஆலய வருடாந்த திருவிழா எ[illegible]வரும் 11ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலி, திருச்சொரூப பவனி ஆகியவற்றுடன நிறைவு பெறவுள்ளது. (உ)

# தாயகத்தின் விளையாட்டுப் பெருமைகளை உலகறியச் செய்யப்பாடுபட வேண்டும்

## அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

எமது தமிழீழத் தாயகத்தின் விளையாட்டுப் பெருமைகளை உலகறியச் செய்வதுடன் அதற்கான சிறந்ததொரு கட்டமைப்பையும் வளர்த்தெடுக்க நாம் பாடுபடவேண்டும்.

கரும்புலிகள் நினைவு தினத்தை முன்னிட்டு நெடுந்தீவு பிரதேச விளையாட்டுக் கழகங்களின் சமாசத்தினால் நடத்தப்பட்டு வந்த விளையாட்டு நிகழ்வின் இறுதி நாள் நிகழ்வு அண்மையில் நெடுந்தீவு பிரதேச எழுச்சிப் பேரவையின் செயலாளர் க.கணேசலிங்கம் தலைமையில் இடமபெற்ற போது,அதில் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ்.மாவட்ட அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சி.செம்மணன் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தனது உரையில் தாயகத்தில் சிறந்த ஓர் விளையாட்டுத்துறையை தேசியத் தலைவர் உருவாக்கியுள்ளார்.இதன் மூலம் சிறந்த முறையில் விளையாட்டின் பெருமைகளை நாம் உலகறியச் செய்ய வேண்டும்.இதற்காக இயல்பு வாழ்க்கை நிலை திரும்ப வேண்டும். தற்சமயம் சமாதானச் சூழல் எமது பல விட்டுக்கொடுப்புகளிலேயே நீடிக்கிறது. எனினும் விளையாட்டுத் துறைக்கான செயற்பாடுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்என்றார்.

இந் நிகழ்வுக்கு கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் என்.கே.சிவாஜிலிங்கம் தனது உரையில் எமது தமிழர் பிரதேசங்கள் பின்தங்கிய நிலையில் இருந்தாலும் விளையாடின் தரத்தினை பொறுத்த நிலையில் நெடுந்தீவு முன்னணியில் உள ளது.

நாங்கள் இப் பிரதேசத்தின் வளர்ச்சிககும் அபிவிருத்திக்குமாகவே நேரடியாக இப் பிரதேசங்களுக்கு விஜயம் செய்து குறைகள்,தேவைகளை நிவர்த்தி செய்ய ஆவல்பட்டிருக்கின்றோம்.

அந்த வகையில் நெடுந்தீவில் விளையாட்டுத்துறையும் விருத்தி அடைய நாம் இன்றும் துணை நிற்பதுடன் நெடுந்தீவு பிரதேச அபிவிருத்திக்காகவும் நாம் உதவுவோம் என்றார்.

யாழ்.மாவட்ட விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் மாதுளன் தனது உரையில் இன்று இலங்கைத் தீவு சர்வதேச அளவில் பேசப்படுகின்றதெனில் அதற்கு உள்நாட்டு யுத்தமும் கிரிக்கெட் விளையாட்டுமே காரணமாகும். நாமும் சர்வதேச தரத்திற்கு எம்மை உயர்த்திக் கொள்ள வேண்டும் அதற்கான ஆயத்தாமாக வடக்குக் கிழக்கு தெரிவு கூடைப் பந்தாட்ட அணி லண்டன் சென்று விளையாடவுள்ளது. லண்டன் வாழ் தமிழர் உதை பந்தாட்ட அணி வன்னி வ்ந்து விளையாடவுள்ளது என்று சுட்டிக் காட்டினார் (உ-68)

# நினைவு தினம்

(கொழும்பு)

தமிழ் பேசும் மக்களுக்காக இறுதி வரை உழைத்த அமரர் அ.தங்கத்துரையின் நினைவு தினத்தை முன்னிட்டு மலரஞ்சலி நிகழ்வு தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும்பு தலைமைச் செயலகத்தில் இன்று காலை 9மணிக்கு இடம் பெறவுள்ளது. (உ)

# திரு இருதயநாதர் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை புனித அடைக்கலநாயகி ஆலய திரு இருதயநாதர் சபையின் 11-வது ஆண்டு நிறைவு விழாவும்,திரு இருதயப் பெரு விழாவும் நாளை காலை 7மணிக்கு பங்குத் தந்தை வண.பிதா நேசராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

திருவிழா திருப்பலியைத் தொடர்ந்து திருச்சொரூப பவனியும் ஏனைய பக்திச் சபைகளுடனான [illegible]று கூடலும் இடம் பெறும்.

இன்று மாலை நற்கருணை வழிபாடும் இடம் பெறவுள்ளது. (வ-5)

# கைவிடப்பட்ட காவலரண்கள் புதுமெருகு பெறுகின்றன

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரின் மத்தியில் அண்மைக்காலங்களில் இராணுவத்தினரின் காவலரண்கள் புதிது புதிதாக அமைக்கப்பட்டு வருகின்றன.

கடந்த சில வாரங்களாக நிலவி வரும் பதற்ற நிலையைத் தொடர்ந்தே இக்காவலரண்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு வருவதாக பொது ஜனங்கள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

அந்த வகையில் முன்னர் அமைக்கப்பட்டு கைவிடப்பட்டு இருந்த யாழ்.பொலிஸ் நிலையக் காவலரண்கள் புதிய மண்மூடைகள்,மரக் குற்றிகள்,தண்டவாளங்கள் கொண்டு புனரமைக்கப்பட்டு வருகின்றது.

அத்துடன் இப் பொலிஸ் நிலையம் அமைந்துள்ள வீதியில் தற்போது மண்மூடைகள்,மரக் குற்றிகளைக் கொண்டு புதியதோர் காவலரணையும் படையினர் இரவிரவாக அமைத்து வருகின்றனர். (உ-4)

## ஸ்ரீ. சு. க - ஜே.வி.பி. கூட்டமைப்பு

# கொள்கை ஆவணம் குறித்து பொது இணக்கப்பாடு எட்டப்பட்டது

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் தமக்கிடையில் கூட்டமைப்பொன்றை ஏற்படுத்துவது சம்மந்தமாக கொள்கை ஆவணம் குறித்து பொது இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது.

கடந்த 6மாதங்களாக இவ்விரு கட்சிகளுக்கும் இடையே நடைபெற்று வந்த பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் இவ்விணக்கப்பாடு காணப்பட்டதாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபாலசிறிசேன தெரிவித்துள்ளார்.

இக்கொள்கை ஆவணம் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பொதுஜன ஐக்கியமுன்னணியின் ஏனைய கூட்டுக்கட்சிகளுடன் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இரு கட்சிகளுக்கும் இடையே ஒப்பந்தம் கைச்சாத்திடுவது சம்மந்தமான திகதி இதுவரை உத்தியோகபூர்வமாக குறிக்கப்படவில்லை ஆனால் திகதி குறிப்பிட்டதும் உரிய தருணத்தில் அறிவிக்கப்படும்.

இக்கூட்டமைப்பு கலந்துரையாடலின் போது பாராளுமன்ற உறுப்பினர் நிமால் சிறிபாலடிசில்வாவிற்கு இடமளிக்கப்படவில்லை என ஊடகங்களில் வெளியான தகவலை அவர் நிராகரித்தார்.

கொழும்பில் நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார் (தி)


திினசரி தியானம்

பிரம்மத்தை அடைதல்

ஆன்மீக நெறிக்குக் கட்டுப்பாடு மிகவும் அவசியமானது. புலன்களையும் மனத்தையும் உடலையும் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முயற்சி செய்யுங்கள். உழையுங்கள் ஆசனங்கள் ஜெபம் தியானம் முறையாகச் செய்யுங்கள். எண்ணம் பேச்சுச் செயல் அனைத்திலும் கட்டுப்பாட்டினை மேற்கொள்ளுங்கள். இப்படிச் செய்வீர்களானால் யாராலும் விபரிக்க முடியாத பெருமைகளுடைய பிரம்மத்தை அடைவீர்கள்.

சிவானந்தர் சிந்தனைகள்

## ஊடகவியலாளர் ஒன்றியம் தமிழ்ச்செல்வனைச் சந்திக்கும்

(வவுனியா)
தமிழ் ஊடகவியலாளர் ஒன்றிய தின் நிர்வாக உறுப்பினர்கள் எதிர் வரும் 12ந் திகதி சனிக்கிழமை தமிழ்த் அரசியல் துறைப் பொறு பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசவுள்ளனர்.
கிளிநொச்சியிலுள்ள அரசியல துறை நடுவப் பணியகத்தில் இடம் பெறும் இச்சந்திப்பில் தற்போதைய அரசியல் நிலைமை குறித்தும் அதில் ஊடகவிய லாளர்கள் ஆற்ற வேண்டிய பங்கு பணிகள் பற்றியும் விரிவாகக் கலந்துரையாடப்ப டவுள்ளது.
இச் சந்திப்பில் ஒன்றியத் தலை வர் இரா.துரைரட்ணம் தலைமை யில் ஊடகவியலாளர் குழு கலந்து கொள்ளும். (த-13)

## சுகாதார சிற்றூழியர் போராட்டம் முடிவு

(கொழும்பு)
அரசாங்க ஆஸ்பத்திரியில் சிற்றூழியர்கள் மேற்கொண்டு வந்த வேலை நிறுத்தம் முடிவுக்கு வந்துள்ளது.
சுகாதார அமைச்சர் பி.தயாரத்னவும் ஊழியர்களின் தொழிற் சங்கத்துக்குமிடையில் நடை பெற்ற பேச்சுவார்த்தையை அடுத்தே வேலை நிறுத்தப் போராட்டம் முடிவுக்கு வந்துள்ளது.
சுகாதார அமைச்சில் நேற்றுப் பிற்பகல் நடை பெற்ற செய்தியா ளர் மாநாட்டில்,தமது கோரிக்கை களில் அனேகமானவை ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதாக அகில இலங்கை சுகாதார சேவைகள் சங்கத் தலைவர் தெரிவித்தார். (த)

## வடபகுதி மீனவர்களுக்கு தொழில் பயிற்சி நெறி

(கொழும்பு)
வடபகுதி மீனவர்களுக்கான தொழில் முயற்சி பயிற்சி நெறி ஒன்று இம் மாத இறுதியில் யாழ். சிற்றி ஹாலில் இரு நாட்கள் நடைபெறவுள்ளது.
யாழ்.பல்கலைக் கழகம், தொழில் திணைக்களம்,கைத் தொழில் அபிவிருத்தி சபை, ஜேர்மன் தொழில் நுட்ப நிறு வனம் என்பன இணைந்து இப் பயிற்சி நெறியை ஆரம்பிக்க வுள்ளன.
இதற்கான விண்ணப்ப படிவங் களை ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவன யாழ். அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
இப் பயிற்சியை முடித்துக் கொள்பவர்களுக்கு சான்றிதழ் கள் வழங்கப்படுவதுடன்,வங்கிக் கடன்கள் வழங்கவும் ஏற்பாடு கள் செய்யப்பட்டுள்ளன. (தி)

**சென்.சாள்ஸ்...**

களால் எரிக்கப்பட்ட சம்பவம் கல்விச் சமூகத்தைப் பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கி உள்ளது.
இத்தகைய விஷமிகளின் செயல் குறித்து பிரஸ்தாப அதிபர் பொலிஸில் ஏற்கனவே முறைப்பாடு செய்துள்ள போதும், பொலிஸார் சரியான முறையில் நடவடிக்கை எடுக்காததன் காரணமாகவே இவ் அனர்த்தம் ஏற்பட்டதாக அப் பகுதி மக்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.
இதேவேளை கார் எரிப்புச் சம்பவம் குறித்தும் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இது விடயத்தில் பொலிஸார் விஷமிகளைக் கண்டுபிடிக்க தவறினால், இது போன்ற சம்பவங்கள் மேலும் தொடர வாய்ப்புகள் உண்டெனவும் இதனால் பாடசாலைகளின் வளர்ச்சியில் அக்கறை காட்டும் அதிபர்கள் மனச் சோர்வு அடைவார்கள் எனவும் கல்லூரி அதிபர் ஒருவர் கருத்துத் தெரிவித்தார்.
இது இவ் வாறிருக்க, அதிபரின் கார் எரிக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து சென். சாள்ஸ் மகாவித்தியாலய மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பாடசாலைச் சமூகம் திரண்டு நேற்று பாடசாலைக்கு முன்பான பிரதான வீதியில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் நேற்று 12மணி முதல் 1மணி வரை வீதிப் போக்குவரத்து தடைப் பட்டது.
கார் எரிக்கப்பட்ட சம்பவம் குறித்து வலம்புரி நேற்று யாழ். பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொண்டு கேட்ட போது தீவிர விசாரணையில் பொலி ஸார் ஈடுபட்டுள்ளதாகவும், விரைவில் விஷமிகள் கண்டு பிடிக்கப்படும் வாய்ப்புக்கள் உண்டு எனவும் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ந-77-110-4)


**காணி விற்பனைக்கு**

கனகரட்ணம் வீதியில் நாயன் மார்கட்டு, நாயன்மார் குளத்துக்கு அருகாமையில் உள்ள 25 பரப்பு காணியும் அதில் உள்ள கட்ட டமும் விற்பனைக்கு உண்டு. கைத்தொழிற்சாலை அமைக்க ஏற்ற இடம்.

**தொடர்பு:-**
**க.கணேசன்.**
**T.P-222 2656**
(7234)


## நாட்டில் சமாதானம் ஏற்படுவதற்கு
# ஐ.தே.முன்னணி அரசுடன் ஜே.வி.பி.கூட்டுசேர வேண்டும்
## கடற்றொழில் அமைச்சர் கருத்து

(கொழும்பு)
நாட்டில் போரை நிறுத்தி நிர ந்தர சமாதானத்தை ஏற்படுத்த வேண்டுமானால்,ஜே.வி.பியினர் ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து கொள்வதே சரியான நடவடிக்கையாகுமென்று,கடற் றொழில் அமைச்சர் மகிந்த விஜயசேகர தெரிவித்துள்ளார்.
ஜே.வி.பி,ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கூட்டுப் பற்றி விமர்சித்துக் கருத்துத்தெரிவித்த அமைச்சர் மேலும் கூறுகையில்;
ஜே.வி.பியும் ஸ்ரீலங்கா சுதந் திரக் கட்சியும் கூட்டுச் சேர்வ தால் நாட்டுக்கு நன்மை விளை யப் போவதேயில்லை.நாட்டில் உண்மையாகவே அபிவிருத்தி யும்,அமைதியும் சமாதானமும் நீடிக்க வேண்டுமானால்,ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத் தையே அனைவரும்பலப்படுத் வேண்டும்,
அந்த வகையில் ஜே.வி.பியி னர் தமது முழுமையான ஆதரவை சமாதானத்திற்கும்,நாட்டின் அபி விருத்திக்குமே வழங்குவதான குறிக்கோளைக் கொண்டிருந்தால், அவர்கள் ஐக்கிய தேசிய முன் னணியுடனேயே கூட்டுச் சேர வேண்டும்.
ஜனாதிபதி சந்திரிகா குமார துங்காவும் உண்மையாகவே சமாதானத்தை விரும்புபவராக இருந்தால் அவரும் ஐ.தே.முன் னணி அரசுக்கே ஆதரவு வழங்க வேண்டுமென்று அமைச்சர் மகிந்த விஜய சேகர மேலும் தெரிவித்தார். (இ-ச)

**கூட்டணியின்..**

விலக வேண்டும் என்று தனது நிலைப் பாட்டை விளககித் தனித்தனி யாகக் கடிதங்கள் அனுப்பியி ருந்தார்.
இந் நிலையில் கொழும்பில் உள்ள தமிழர் விடுதலைக் கூட் டணியின் காரியாலயத்தில் நாளை நடைபெறவுள்ள மத்திய குழுக் கூட்டத்தில் ஆனந்தசங்கரியை கூட்டணித் தலைமைப் பதவியில் இருந்து நீக்கக் கோரும் பிரேரணை கொண்டு வரப்படலாம் என எதிர் பார்க்கப்படுவதாகக் கூட்டணி வட் டாரங்களில் இருந்து .தெரியவந் துள்ளது.
கூட்டணியின் தலைமைப் பதவி யில் இருந்து ஆனந்தசங்கரியை நீக்கக் கோரும் விடயம் நாளை நடைபெறவுள்ள தழிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய குழுக் கூட்ட நிகழ்ச்சி நிரலில் இடம் பெற வில்லை என்று தலைவர் ஆனந்த சங்கரி தெரிவித்துள்ள நிலையில், இவ்விடயம் நிகழ்சி நிரலில் இடம் பெற வேண்டிய அவசியம் இல்லை என்று மற்றொரு எம்.பி.தெரிவித்தி ருப்பதாகவும் கூட்டணி வட்டாரங் களில் இருந்து தெரியவந்துள்ளது.
மாறுபட்ட கருத்துக்களுடன் நாளை கூடவுள்ள மத்திய செயற் குழுக் கூட்டத்தில் கலந்து கொள் வதற்கென யாழ்ப்பாணம்,மட்டக் களப்பு,திருகோணமலை,வன்னிப் பிரதேசம் ஆகிய இடங்களில் இருந்து மத்திய குழு உறுப்பினர் கள் கொழும்புக்கு விரைந் துள்ளனர்.
தமிழர் விடுதலைக் கூட்டணி யின் மத்திய குழுவில் வடக்குக் கிழக்கைச் சேர்ந்த 36 பேர் அங் கம் பெற்றுள்ளனர்.
இவை இவ்விதம் இருக்க;நாளை நடைபெற்வுள்ள கூட்டணியின் மத்திய குழுக் கூட்டத்தில் ஆனந்த சங்கரியைப் பதவி விலக்கக் கோரும் விவகாரம் எழுப்பப்படு மானால் மத்திய குழு் உறுப்பி னர்கள மனச்சாட்சியின் பிரகாரம் நடந்து கொள்வார்கள் என்று தான் எதிர்பார்ப்பதாக கூட்டணி யின் மூத்த மத்திய குழு உறுப் பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.
இதேவேளை கூட்டணியின் தலைமைப் பதவிகளில் இருந்து ஆனந்தசங்கரியை விலத்துவ தாக இருந்தால் மத்திய குழு வில் அங்கம் வகிக்கும் 36 உறுப் பினர்களில் பெரும்பான்மை யினர் ஆதரவு தெரிவிக்க வேண்டும் என்று கூட்டணி வட் டாரங்கள் தெரிவித்துள்ளன.(ம)

## அ.அட்டைகளைப் பெறலாம்

(கல்வயல்)
தென்மராட்சிப் பிரதேச செய லகத்திற்கு கிடைக்கப்பெற்ற அடையாள அட்டைகள் யாவும் கடந்த புதன்கிழமை கிராம உத்தி யோகத்தர்களிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளன.
உரியவர்கள் கிராம அலுவ லருடன் தொடர்பு கொண்டு அவற்றைப் பெற்றுக் கொள்ள லாம் என பிரதேச செயலர் அறி வித்துள்ளார். (உ-36)

## அடையாள அணிவகுப்பு

(கொழும்பு)
தெஹிவளை பொலிஸ் நிலையப் குற்றப் புலனாய்வுப் பொறுப்பதிகாரி சுனில் தாப்புரூ சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பான அடையாள அணி வகுப்பு இம் மாதம் 15-ம் திகதி நடைபெறவுள்ளது.
கல்கிசை நீதிமன்றத்தில் பலத்த பாதுகாப்புடன் நடத்தப்ப டவுள்ள இந்த அடையாள அணி வகுப்பில் சந்தேக நபரான எஸ்.மதன்குமார் நிறுத்தப்பட வுள்ளார்.
இந்த அடையாள அணிவகுப்பின் போது சந்தேக நபரை அடை யாளம் காட்டுவதற்காக மூன்று சாட்சிகள் அழைக்கப்பட்டு ள்ளனர். (வ)


**LOGIC**
(paper class)
A/L 2004
ஆரம்பம்~05.07.2003
2.P.M
BY.P.கமல்
BRIGHTMAN
நாவலர் வீதி



**கணித வகுப்புக்கள்**

தரம் 6 தொடக்கம் தரம்11 வரையான வகுப்புக்களுக்கு அனுபவம் வாய்ந்த ஆசிரியரி னால் கணித வகுப்புக்கள் தனியாகவும் குழுவாகவும் கற்பிக்கப்படும்.

தொடர்பு:
**ஜெ.கோகுலவாசன்**
99,அரசடி வீதி,
(யாழ், இந்து மகளிர் கல்லூரிக்கு அண்மையில்)
யாழ்ப்பாணம்.



**MEDICAL CHECK UP**
**வைத்திய பரிசோதனை**

நோய் வருமுன் காப்போம்
திடீர் மரணத்தைத் தவிர்ப்போம்

- 40 வயதிற்கு மேற்பட்ட நோய் உள்ள, நோய் அற்ற அனைவரும் இந்த MEDICAL CHECK UP ஐச் செய்வதன் மூலம் நோயற்ற சுகவாழ்வு வாழலாம்
- X-RAY- ECG, சில முக்கிய இரத்தப் பரிசோதனைகள் சிறுநீர்ப் பரிசோதனை.

இலவச வைத்திய ஆலோசனையுடன் கூடிய MEDICAL CHECK UP குறைந்த கட்டணத்தில்! விபரங்களுக்கு நேரில்!
போக்குவரத்து வசதி கருதி
**சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்**
(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்)
ஆஸ்பததிரி வீதி, யாழப்பாணம்.



## சித்தன்கேணி சிவனின் பஞ்சரதம் சிறப்பு மலருக்குப் பங்களிப்புச் செய்தோர்

| | | | |
|---|---|---|---|
| க.சிறீதரன் அம்பாள் ரவல்ஸ் சித்தன்கேணிச் சந்தி | கேதீஸ் களஞ்சியம் சித்தனகேணிச் சந்தி | கிளானி கொமினிக்கேசன சித்தன்கேணிச் சந்தி | M.G.சேவிஸ்ஸ்ரேசன் சித்தன்கேணிச் சந்தி |
| நல்லி சில்க்ஸ் யாழ்ப்பாணம் | கஜராம் தெலைத் தொடர்பகம் சித்தன்கேணிச் சந்தி | சுப்றா(14) சித்தன்கேணி | விநாயகர் தொலைத் தொடர்பகம் சித்தன்கேணிச் சந்தி |


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.07.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது